யாழ்ப்பாணம் தமிழ் நூலகம்

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்
கிடைக்கப்பெற்றது
06 AUG 1998
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

REGISTERED AS CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 12 விலை ரூபா 5 15 ஜூலை – 30 ஜூலை 1998

**மீண்டும் நினைவூட்டுகின்றோம்**

எமது பாதுகாவலன் பத்திரிகைக்கு நிருபர்களாக இருக்க விரும்புவோர் பங்குத்தந்தையின் சிபார்சுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஒவ்வொரு பங்கிற்கும் 2 நிருபர்களை மட்டும் ஏற்றுக்கொள்வோம். எமக்கு அனுப்பி பிரசுரிக்கப்படும் தரமான உங்கள் செய்திகளுக்கு சிறு சன்மானம் வழங்கப்படும்.

(ஆ–ர்)

## நிவாரணம் நிறுத்தப்பட்டமையால் வன்னியில் பெரும் பஞ்சம்

**–கிளி /முல்லை மறைக்கோட்ட முதல்வர் P. இருதயதாஸ் அடிகள் பாதுகாவலனுக்கு பிரத்தியேக பேட்டி.**

வன்னியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிவாரணம் நிறுத்தப்பட்டமையால் மக்கள் பெரும் துன்பதிற்குள்ளாகியுள்ளனர். அண்மைக் காலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் உணவுப் பொருட்கள் தவிர்ந்த உதவியையே செய்து வந்துள்ளன. மனித முன்னேற்ற நிலையமும் தலமையகமான செடக் நிறுவனத்திலிருந்து அதிகம் உணவு உதவிகளைப் பெறமுடியாதுள்ளது. மற்ற உதவிகளுக்கான தொகையையும் வெகுவாகக் குறைத்துள்ளன. ஏற்கனவே மனித முன்னேற்ற உதவிகளில் உணவுப் பொருட்களை நாம் குறைத்திருந்தோம். மற்ற உதவிகளைத் தான் செய்து கொண்டிருந்தோம்.

மக்கள் முற்று முழுதாக நிவாரணத்தைத் தான் நம்பி இருந்தார்கள். நிவாரணம் நிறுத்தப்பட்ட செயல் கொடூரமானது. ஆயர் அவர்களும் நிவாரணத்தை நிறுத்தவேண்டாமென அரசிற்கு வேண்டுகோள் விடுத்ததாக அறிந்தேன் என்று P. இருதயதாஸ் அடிகள் பாதுகாலவனுக்கு கருத்து வெளியிட்டார்.

மேலும் கருத்து தெரிவிக்கும் போது கொலரா நோய் தொற்றுவதற்கான அறிகுறிகள் தெரிவதாகவும் அதனைத் தடுப்பதற்காகத் தனி வாட்டுக்கள் அமைக்கப்படும் முயற்சி நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

## மகிழ்ச்சி உள்ளங்களை அல்ல. மன வேதனை உள்ளங்களைக்கண்டோம்

## கல்கிசை - தெகிவளைப் பங்குகளின் மடு யாத்திரை

மோ– தார்சீயஸ்

கல்கிசைப் பங்கும், தெகிவளைப் பங்கும், இணைந்து மருதமடு அன்னையிடம் திருயாத்திரை புறப்பட்டோம். இருமாத ஆயத்தங்கள். ஆனால் ஒரு பங்குக்கு ஒரு பஸ் பயணிகள் மட்டும் பாதுகாப்பு அமைச்சினால் அனுமதிக்கப்பட்டோம். இதனால் பலருக்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை

அனுமதிக்கப்பட்ட யாத்திரிகளும், அணிந்து செல்லும் உடுப்புகளை விட, மேலதிகமாக ஒரு உடைகளும், 1000– பணமும், அன்றாடப் பாவனைக்குரிய பொருட்கள் ஒவ்வொன்றும் மாத்திரம் எம்முடன் எடுத்துச் செல்லவும் அனுமதி. இவைகளும் சாதாரண சொப்பிங் பையில் தான் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டோம். ஏனைய பைகள் அனுமதிக்கப்படவில்லை.

நாம், கல்கிசைப் பங்கின், புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு கிளமெனற் றோசாயிறோ அடிகளினதும் தெகிவளை புனித மரியன்னை ஆலய உதவிப் பங்குத்தந்தை அருள்திரு கென்னடி அடிகளினதும் வழி நடத்தலோடு திருப்பயணத்தை ஆரம்பித்தோம்.

காலை 4.00 மணிக்கு ஆரம்பித்த எமது யாத்திரை, மருதமடுப்பதியை அடைய மாலை 6.45 மணியாகியது. காரணம் நாம் கண்டி வீதியால் குருநாகல் டம்புள்ளையால் அனுராதபுரம் சென்றடைந்து, அங்கிருந்து மதவாச்சி, வவுனியா ஊடாக மடு செல்ல வேண்டியிருந்தது, இவ்வழியில் ஈறாற்பெரியகுளம், வவுனியா முதலிய

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

### 2000 ஆம் ஆண்டில் நற்கருணை மாநாடு

2000 ஆம் ஆண்டு சர்வதேச நற்கருணை மகாநாடு றோமா புரியில் நடைபெற இருக்கிறது. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கமும் தேசிய நற்கருணை மகாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது. 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்" – என்ற கருப்பொருளில் தேசிய ரீதியில் நடைபெறும் இந்த நற்கருணை மகாநாட்டிற்கு ஆயத்தமாக மறை மாவட்டங்களிலும் நற்கருணை மகாநாடுகளை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### பாப்பரசர் தினம் யூன் 29, 1998

"எங்கள் ஞானத்தந்தையர்க்கு இறைவனே ஆசீர் அளித்திடுவீர்."

### அன்னை தெரேசாவின் அன்புப் பணியாளர்கள் யாழ் வருகை

அண்மையில் அன்னை தெரேசாவின் அன்புப் பணியாளர் சபையின் இலங்கை, பாகிஸ்தான் நாடுகளுக்கான சபைத் தலைவி அருள் சகோதரி றெஜீன் அவர்களும் அருள் சகோதரி யூவாண்ட் அவர்களும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் அழைப்பை ஏற்று யாழ் வருகை தந்தனர். ஓய்வு பெற்ற யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் அன்னை தெரேசாவின் அன்புப் பணியாளரின் சேவைக்காக அழைப்பு விட்டபோது அன்னை அவர்களின் இறை பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக வர முடியாது உள்ளது என தமது மடலில் எழுதி இருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

யாழ் நகருக்கு வருகை தந்த அருள் சகோதரிகள் திருநகர், குருநகர், உடுவில் ஆர்க், கொழும்புத்துறை, யாழ். பல்கலைக் கழகம், போன்ற இடங்களுக்கும் சென்று இன்னல் படும் மக்களைக் சந்தித்தனர். குறிப்பாக குருநகர் சீனோரில் வன்னியில் இருந்து வந்தவர்களையும் குருநகர் கடல்ப் பரப்பில் கடந்த காலத்தில் பலியான மீனவர்களின் விதவை மனைவிகளையும், கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்தில் இருக்கும் வயோதிபர்களையும், ஆர்க்கில் உள்ள சிறுவர்களையும் சந்தித்து உரையாடினர்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

### மறைந்த யாழ் ஆயர் மேதகு ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் 26ஆம் ஆண்டு நினைவு



நாளான 17–07–1998 வெள்ளிக்கிழமை காலை யாழ் பேராலயத்தில் யாழ் ஆயரும், குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

ஆயருக்கு எம் அஞ்சலிகள்!

## ஆசிரியர்களாகிய நாம் விடும் தவறை உணர்ந்து திருந்தி வாழ உதவியாக இருந்தது

–மனித முன்னேற்ற நடுநிலைய முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாசறைபற்றி ஆசிரியர் யோ.றொய்சலா

**யாழ் மனித முன்னேற்ற நடு நிலையத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை 26.06.98 தொடக்கம் 29.06.98 காலைவரை நடைபெற்றது. இதற்கு யாழ்ப்பாணம், குருநகர் உரும்பிராய், நாவாந்துறை, அளவெட்டி, தாழையடி, செம்பியன்பற்று, கொழும்புத்துறை, நெடுந்தீவு, அச்சுவேலி, அரியாலை, பருத்தித்துறை, கொய்யாத்தோட்டம், ஊர்காவற்றுறை, எழுவைதீவு ஆகிய இடங்களில் இருந்து முன்பள்ளி ஆசிரியர்கள் 32 பேர் கலந்துகொண்டனர். இதனை இயக்குனர் அருள் திரு. C.G. ஜெயக்குமார் அனுசரணையுடன், இணைப்பாளர் செல்வி M. பத்மசேகரி முன்னின்று சுக வாழ்வுக் குழவினருடன் நடத்தி முடித்தார். இப் பயிற்சிப் பாசறையின் அனுபவப்பகிர்வினை ஆசிரியர் யோ.றொய்சலா(செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் முன்பள்ளி) பகிர்ந்து கொள்கிறார்.**

யாழ் மனித முன்னேற்ற நடு நிலையத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிப் பாசறையில் முழுமையாகப் பங்கு பற்றினேன்.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அருள்திரு யேசுதாசன் பிலிப் (அ.ம.தி.) அடிகளை பாராட்டி நன்றி கூறுகின்றோம்

க.பொ.த. உயர்தரப் பாடத்திட்டம் சென்ற ஆண்டு முதல் மாற்றியமைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இம்மாற்றத்திற்கமைய மாணவர்களின் நன்மைகருதி பல ஆசிரியர்கள் நூல்களை வெளியிட்டு கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் உதவிபுரிந்தனர். ஆயினும் கிறிஸ்தவ பாடத்தை ஒரு பாடமாகப் பயிலும் மாணவராகிய நாங்கள் அப்பாடத்திற்குரிய துணை நூல்களோ, பாடக்குறிப்புக்களோ இன்றி நம் கல்வியைத் திறம்பட கற்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டோம். இந்தவேளை பல ஆண்டுகளாக

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் (திருப்பாடல்கள்-127-1)

# எம்கருத்து

## இசையின்வழிவில் இறைவனை வழிபட...

ஆலயங்களில் பாடல்களைப் பாடுவதற்கு பாட்டுப் புத்தகங்கள் இல்லை என்று சில காலமாக எழுப்பப்பட்டு வந்த குறை நீங்கப் போகிறது.

இடம் பெயர்வாலும், அச்சுப்பொருட்களின் தட்டுப்பாட்டாலும் உரிய காலத்தில் அச்சிடப்பட முடியாதிருந்த பாட்டுப் புத்தகங்களை ஆயரின் அனுமதியுடன் திருவழிபாட்டு நிலைய இயக்குனர் J.J. மவுளிஸ் அடிகள் அச்சிட முன் வந்திருக்கும் முயற்சியை நாம் பாராட்ட வேண்டும்.

கம்பியூட்டரில் ரைப் செய்து ஒவ்செற் முறையில் அச்சிடத் திட்டமிடப்பட்டுள்ள இந்த முயற்சிக்கான பணத்தை பங்குகளில் இருந்தே முற்பணமாகப் பெற வேண்டிய நிலையிலும் துணிந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சிக்கு அனைவரும் குறிப்பாகப் பங்குத்தந்தையர்கள் உறுதியான கரம் நீட்ட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம்.

பாடல் புத்தகங்கள் வெளி வந்த பின்னர் யாழ் திருச்சபை ஆலயங்களில் வழிபாடுகீள் நடைபெறும் போது அநேகமானவர்கள் பக்தியோடு பங்கெடுக்கவும் "இனிது பாடுகிறவன் இருமுறை செபிக்கிறான்" என்பது நடைமுறைப் படுத்தப்படவும் முடியும் என எதிர்பார்க்கிறோம்.

திருவழிபாட்டில் இசை இன்னும் பல இடங்களில் குழப்பத்திற்குரியதொன்றாகவே இருக்கிறது.

திருவழிபாட்டில் இசையின் முக்கியத்துவத்தை இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டு அதிகாரம் ஆறு முழுவதும் பேசுகிறது.

திருவழிபாட்டில் இசை பக்தி உணர்வைத் தூண்டுகிறது. மனதை இறைவனை நோக்கி எழுப்புகிறது. வழிபாட்டிற்கு ஆடம்பரத்தை ஊட்டுகிறது. அனைவரும் பங்கெடுக்க வழி சமைக்கிறது. செபத்திற்கு இனிமையைத் தருகிறது.

இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்தே திருவழிபாடு திரு இசையோடு கொண்டாடப் படும்போது தனிச்சிறப்படைகிறது என்று கூறுகிறது வத்திக்கான் சங்க ஏடு.(தி.வ.113) ஒவ்வொரு ஆலயத்திற்கும் பாடகர் குழு(க்கள்) இருப்பது இறைமக்கள் அனைவரும் வழிபாட்டில் குறிப்பாக இசையில் பங்கெடுக்கத் துணைபுரியவே. பாடகர் குழுக்கள் அநேகர் வேளைகளில் இதைப் புரியாமல் இருப்பதும் புரியமறுப்பதும் வேதனைக்குரியதே.

பாடல் குழாமினர் ஒன்றில் தமக்குள் பிரச்சனைப்படுவர் அல்லது மற்றவர்களோடு பிரச்சனைப்படுவர் என்று சொல்லப்படுவது முற்று முழுதாகத் தவறானதல்ல. (விதிவிலக்கு உண்டு)

புதுப்பாடல்களைப் பாடவேண்டும் என்ற மோகம், தமது திறமையைக் காட்டவேண்டும் என்ற ஆவல், எல்லோரும் சேர்ந்து பாடினால் இராகத்தைக் குழப்பி விடுவர் என்ற குற்றச் சாட்டு – இவை எல்லாம் தீர்க்கப்பட முடியாதவையல்ல.

எல்லோருக்கும் பாடல் பயிற்சி, அனைவர்க்கும் பாடல் புத்தகம், குழப்பமில்லாத ஆனால் கட்டாய இசைக் கருவிகள், திட்டமிடப்பட்ட பொருத்தமான பாடல் தெரிவு, எல்லோரும் பாடக்கூடிய பாடல்கள் என்பன இவற்றிற்குத் தீர்வாகலாம்.

## மானிப்பாய்.......

(8ம் பக்கத் தொடர்ச்சி)

றையை அருள்தந்தை நேசராஜா அடிகளார், பங்குத்தந்தை இயூஜின் அடிகளார் இருவரும் இணைந்து தொடக்கி வைத்தனர்.

ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நிரந்தர மறை ஆசிரியர்களும், அருட்சகோதரி மேசி (தி.கு.க.) ஆனைக்கோட்டைப் பங்கைச் சேர்ந்த மறை ஆசிரியர் விக்டோரியா. ம. அவர்களும் சேர்ந்து இக்குழுக்களை நெறிப்படுத்தினார்கள். பெந்தேகோஸ்தே அனுபவம், வேதசாட்சிய வாழ்வின் அனுபவம், நமது பெந்தேகோஸ்து விழா என்ற மூன்று கருத்துக்களை மையமாக வைத்து மாணவர்களை அவர்கள் வாழ்வின் அனுபவங்களுக்கு வழிநடத்திச் சென்றதை அங்கு காணக்கூடியதாக இருந்தது. வினா விடைப் போட்டி, பாடல் பயிற்சி. தொலைக்காட்சி போன்றவற்றினால் இப்பாசறையானது புது விதத்தில் மெருகூட்டப்பட்டது.

மூன்றாவது நாள் கிறிஸ்தவம் றோ.க. க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்றன. மறை ஆசிரியர்கள் திரு சவுந்தரம், திரு. ஜெயசீலன், திரு அந்தோனிப்பிள்ளை ஆகியோர் இம்மீட்டல் வகுப்புக்களைப் பொறுப்பெடுத்து முன்னின்று நன்முறையில் செயற்படுத்தினார்கள்.

மறை ஆசிரியர்கள், உறுதி பூசுதல் பெறும் மாணவர்கள், க.பொ.த. கிறிஸ்தவம் உயர்தர மாணவர்கள் நன்முறையில் மறை அறிவில் அனுபவம் பெற மறைக்கல்வி நடு நிலையமானது பல வழிகளிலும் கைகொடுத்து மானிப்பாய் பங்கிற்கோர் மகத்தான பணியினைச் செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

வாழ்க! வளர்க!
மறைக்கல்வி நடுநிலையப் பணிகள்

*அருள்தந்தை இயூயின்*
*பங்குத்தந்தை*
*மானிப்பாய்*

### வாழ்வு தரும் ஏட்டு வார்த்தையை மீட்டு

யூபிலி ஆண்டு
அழைப்பினைக் கேட்டு
திட்டங்கள் தீட்டு
சமநிலை காட்டு
சமத்துவம் கூட்டு
பேதமை ஓட்டு
சுயநலமதைப் பூட்டு
அன்புக்கரம் நீட்டு
பண்பதனைச் சூட்டு
பசித்தவர்களுக்கு ஊட்டு
சிறைக்கதவைத் தட்டு
பகைமையதைச் சுட்டு
பணிவதனை எட்டு
வாழ்வுதரும் ஏட்டு
வார்த்தையினை மீட்டு
இதயத்தைத் தொட்டு
மன்னிப்பை மாட்டு
சிலுவைக்கொடி நாட்டு
இறைசெல்வத்தை ஈட்டு
சமாதான வேட்டு
முரசொலிகள் கொட்டு
புதியதோர் பாட்டு
பண்ணிசைக்கும் சிட்டு

*எஸ்.யேசுதாஸ்*
*கொழும்புத்துறை*

# இளைஞர் மன்றச் செய்திகள்

தொகுப்பு: கி. செல்மர் எமில்

* இணைப்பங்குகளான பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய, கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர் ஒன்றியங்களின் கூட்டு வெளியீடான, 'துடிப்பு' காலாண்டு கையெழுத்துச் சஞ்சிகையின் இரண்டாவது இதழின் வெளியீட்டு நிகழ்வு 28–06–1998 ஞாயிறன்று கிறிஸ்து அரசர் ஆலய பங்கு இல்லத்தில் இடம்பெற்றது. செல்வன் கியூபேட் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், வரவேற்புரையை கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர் மன்றத் தலைவி செல்வி சுகந்தியும், இதழின் வெளியீட்டு உரையை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த செல்வி யூயினியும், மதிப் பீட்டுரையை யாழ் மறைக்கோட்ட முதல்வர் A.C. கிறிஸ்தோபர் அடிகளாரும் நிகழ்த்தினர். மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குனர் C.G. ஜெயக்குமார் அடிகளார் 'இளைஞர்களின் சமூகப் பணி' குறித்து உரையாற்றினார். பங்குத்தந்தை M.V.E ரவிச்சந்திரன் அடிகளார் ஆசியுரை வழங்கினார். இந் நிகழ்வின் இறுதி நிகழ்வாக பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய இளைஞர் ஒன்றியம் வழங்கிய நகைச்சுவை நாடகம் இடம்பெற்றது. 'துடிப்பு' முதலாவது இதழை அன்னாள் ஆலய இளைஞர் ஒன்றியத்தினர் தயாரித்திருந்தனர் என்பதும், இவ் இரண்டாவது இதழை கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர் ஒன்றியத்தினர் தயாரித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

* சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலய நிதிக்காக, புனித யுவானியார் ஆலய இளைஞர் குழுமத்தின் ஏற்பாட்டில் 'சாரங்கா' இசைக்குழுவினர் வழங்கிய 'இராஜராகங்கள்' என்னும் இசைநிகழ்ச்சி 28–06–98 மாலையில் புனித யுவானியார் ஆலய முன்றலில் இடம் பெற்றது. பெருமளவு மக்கள் இதனைக் கண்டுகளித்தனர். இதற்கான நுழைவுச் சீட்டுக்கள் ஏற்கனவே பெருமளவில் விற்பனையாகி இருந்தன.

* யாழ் புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாட இலவச மீட்டல் வகுப்புக்கள் இவ் வருடமும் ஜூன் 27ம், 28ம் திகதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை புனித பத்திரிசியார் கல்லூரி சிமிற் மண்டபத்தில் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. 150 க்கும் அதிகமான மாணவர்கள் இவ்வகுப்புக்களில் ஆர்வத்துடன் பங்குபற்றினர். தூர இடங்களில் இருந்து வந்தவர்களுக்கு தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. பாடத்திட்டத்தின் பல்வேறு தலைப்புக்களிலும் இடம் பெற்ற இவ் வகுப்புக்களுக்கான விரிவுரைகளை அருட்தந்தையர்களான S. ஜெயபாலன் குரூஸ், A.ஜீவாப்போல், G.V. பிலேந்திரன், M.P.A.R. மைக்கல் சவுந்தரநாயகம், திருமதி M. ஜோண் அரியதாஸ் (மல்லிகா) , திரு. T. ரங்கநாயகம், திரு T. வசந்தநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இப்புதிய பகுதி, எமது யாழ். மறை மாவட்டத்தில் பங்குகளில் இயங்கும் இளைஞர் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பாதுகாவலனில் ஆரம்பமாகின்றது. நீங்களும் உங்கள் அமைப்புக்களின் செயற்பாடுகளை பங்குத்தந்தையின் சிபார்சுடன் அனுப்பிவைத்தால் பிரசுரிப்போம். (ஆ-ர்)

# பிரியாவிடை வைபவம்

யாழ். மரியன்னை பேராலய இளைஞர் இயக்குனராக இருந்து அண்மையில் வன்னிப்பகுதிக்கு இறைபணி ஆற்றச் சென்ற அருள்திரு S. ஆனந்தக்குமார் அடிகளின் பிரியாவிடை வைபவத்தில் எடுக்கப்பட்ட இப்படத்தில், யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பேராலயப் பங்குத்தந்தை A.C. கிறிஸ்தோபர்– அப்போதைய இளைஞர் உருவாக்க இயக்கனரும், உதவிப் பங்குத்தந்தையுமான அருள்திரு S. ஆனந்தக்குமார் ஆகியோரைச் சூழ நிற்பது யாழ் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர்



குடும்ப அரங்கம் 02

# பகிர்ந்து வாழும் குடும்பம்

### குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை

குடும்பம் ஒரு குட்டிச் திருச் சபை என்ற எண்ணம் பழமை யானது.திருச்சபையின் பிதாப் பிதாக்கள் இதை எடுத்துக் கூறினர். 2ஆம் வத்திக்கான் சங்கம் இந்த எண்ணத்தை உயிர்ப்பித்தது. திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இந் தக் கருத்தை அடிக்கடி தனது அறிவுரைகளில் கூறி வருகின்றார். திருச்சபையின் முப்பணிகள் ஆவன குருத் துவப்பணி, இறைவாக்கு உரைக்கும் பணி, ஆட்சி புரியும் பணி. குடும்பங்களும் இந்த முப்பணிகளில் பங்கு கொண்டு சமூகத்திற்கு சேவையாற்றுகின்றன.

### ஆராதிக்கும் சமூகமாக:-

ஆராதிக்கும் சமூகமாக குடும் பங்கள் ஞாயிறு திருப்பலி யில் பங்கு கொள்கின்றன. செபம் குடும்பத்தின் இதய மாக மாற வேண்டும். செப மாலை சொல்லுதல், திருவிவி லியத்தை வாசித்துத் தியா னிப்பதும், திரு இருதயநாத ருக்கு ஆராதனை செலுத்து வதும், ஏனைய இயேசுவின் முப்பணிகளாகப் பிரிக்கப்பட் டுள்ளன. இப் பணிகளைத் திருச்சபையும் ஆற்றுகின்றது. புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவதன் மூலமாக ஒரு குடும்பத்தில் செபச் சூழலை ஏற்படுத்தலாம். இதற்கு பெற் றோர்கள் தங்கள் பிள்ளை களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும். பெற்றோரும் பிள்ளைகளும் மாறி மாறி இப்படிப்பட்ட செபங்களுக்கு தலைமை தாங்க முன்வர வேண்டும். குடும்பமாக ஒரு பங்கில் அருட்சாதன வாழ் வில் பங்கு பற்றுதல் வேண்டும்.

### இறைவாக்கு உரைக்கும் சமூகமாக:-

விசுவாசத்தின் படிப்பினை களை குழந்தைகள் பெற் றோர் என்ற முதற் பள்ளி யில் கற்கிறார்கள். அவர்கள் வாயினால் மட்டுமல்ல தங் களுடைய எடுத்துகாட்டான வாழ்வின் மூலம் பிள்ளைக ளுக்கு போதிக்கின்றார்கள் அதே நேரத்தில் பிள்ளை களும் தங்களது எளிமை

யான முறைகளில் பெற்றோர் களுக்கு ஆசிரியர்களாக மாறுகின்றனர். பிள்ளைகளி டத்திலிருந்து பெற்றோர் பலவற்றை கற்கவேண்டி உள் ளது. எனவே பெற்றோர் என் றால் படிப்பிக்கின்றவர்கள் மட்டுமல்ல, அதே நேரத்தில் கற்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த முறையில் குடும்பம் முழுவதும் கிறிஸ்து வுக்கு சான்று பகர்ந்து ஒரு பங்கிலே ஒளியாகத் திகழ லாம்.

### பணிபுரியும் சமூகமாக

பணிபுரிதல் குடும்பத்தில் தான் தொடங்குகின்றது. அன் புப்பணி வீட்டிற்தான் தொடங் குகின்றது. எண்ணற்ற விதங் களிலே ஒரு கணவன் தன் மனைவிக்கும் ஒரு மனைவி தன் கணவனுக்கும் பணிபுரிய லாம். அதே போல் பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளை கள் பெற்றோருக்கும் உதவ லாம். ஆகையினால் ஒருவர் ஒருவருக்கு பணி விடை புரி யும் முறைகள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். இந்தப் பணி விடை புரிதல் சிறுசிறு காரியங்களாக இருந் தாலும் அவை மனித உறவு களின் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும். ஒரு தந்தை அல்லது தாய் தான் உழைக் கும் பணத்தை குடியிலோ அல்லது சுபபோகங்களிலோ விரையம் செய்யாது குடும்பத் தின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவராக இருத்தல் வேண் டும். பணிவிடை புரிதல் கிறிஸ்தவ அன்பின் வெளிப் பாடு இதை நாங்கள் வீட்டில் பழகிக் கொள்கின்றோம். வீட் டில் பணி புரிவதில் எவ்வள வுக்கு ஒருவர் அக்கறை செலுத்துகின்றாரோ அவ்வ ளவுக்கு அதிகமாக சமுதா யத்தில் பணிபுரிவதில் அக் கறை உள்ளவராக இருப்பார்.

### குடும்பம் ஒரு அன்பு சமூதாயம்.

ஒவ்வொரு மனித உறவிற்கும் அன்பு ஒரு மூலைக் கல்லாக அமைகிறது.அன்பில்லாமல் கணவனும் மனைவியுமாக இருத்தல் ஆகாது. திருமண அன்பு ஒரு புதுவாழ்வைத் தருகின்றது. இந்த வாழ்வு அன்பினால் வளர்க்கப்படுகி றது. அன்பு பரஸ்பரமானது.

அன்பு பகிர்ந்து வாழும் தன்மை உடையது. அன்பு

தன்னலம் நாடாது. அன்பு எப் பொழுதும் தன்னை மற்றவர் களுக்குக் கொடுக்கும். தன் னைப் பகிர்ந்தளிக்கும், அன்பு மற்றவர்களுக்காகத் தன் னையே ஒறுக்கும். ஒரு குடும்பத்தில் அன்பு நிறைந் திருந்தால் அது அந்த வீட் டில் இருந்து வழிந்தோடி சமூ கத்திற்கு நன்மை பயக்கும். ஆகையினால் அன்பு எல்லா மனித செயல்களையும்விட பகிரும் தன்மை உடையது. குடும்பத்திற்கு நசரேத்தூர் குடும்பம் ஒரு எடுத்துக்காட்டு.

### திருக்குடும்பம் பகிர்தல் குடும்பத்திற்கு ஒரு சிறந்த மாதிரி.

சூசையின் செயல்பாடு மரியா ளின் நற்பெயரைப் பாது காத்து அவளின் மகனுக்கு தாவீதினுடைய மரபில் ஒரு பெயரை வைக்க வேண்டும். இது இறைவாக்கை நிறை வேற்றுவதற்கே ஆகும். அவர் தனது சிறிய குடும்பத்தை கொலைக்கார ஏரோதிடமி ருந்து பாதுகாத்தார். தனது வளர்ப்பு மகன் வாழ்வதற்கு ஏதுவாக ஒரு வேலையைப் பயிற்றுவித்தார். அவர் யேசுவை துன்பத்தைத் தாங் கும் வல்லமை உடைய வராகவும் முரண்பாடுகளை மனத்திடனுடன் எதிர்கொள்ப வராகவும், சனங்கள் மட்டில் பொறுமை உடையவராகவும் இருக்க உருவாக்கினார்.யேசு வின் உருவாக்கலில் சூசை முக்கியபங்கை வகித்தார். அதனால் தான் மத்தேயு அவரை "நீதிமான்" என அழைக்கின்றார்.(மத்1:19)இந்த ஒரு சொல்லே அவரின் பங்க ளிப்பு எப்படிப்பட்டது என் பதை விளக்கப் போதுமானது. மீட்பு வரலாற்றில் மரியாளின் பங்களிப்பு தனித்துவமானது. அவளின் "ஆகட்டும்" என்ற செயல் இறை மகனை மனுவு ருப்பெற வைத்தது. இதனால் அவள் இறைவனின் தாயாக வும் மனுக்குலத்தின் தாயா கவும் மிளிருகின்றாள். திருக் குடும்பத்தைப் பற்றி மிகக் குறைவாக நாம நற்செய்தி யில் காண்கின்றோம்.

(வளரும்)

பிரிவு 111இல் முதலாம் இடம்பெற்ற கவிதை

செ. சுபோதினி
பங்கு: புனித யூதாததேயு
சென் யூஸ்லேன், இளவாலை
கவிதை : பிரிவு 3

### *வரதட்சனை (சீதனம்)*

சீதனக் கொடுமை ஐயகோ
சீரழி நிலமை
சீதனம் சீதனம்
சீ . . . . இதென்ன
சின்னத்தனம்

பெண்களைப் பெற்றவர்கள்
பெருமூச்சு விடுகிறார்கள்
கண்களைக்
கசக்கியவர்களாய்
கண்ணீர் விடுகிறார்கள்

நாம் பிறந்த நாட்டை
நாலெழுத்தில் வடிவாக
தாயகம்என
மொழிகின்றார்கள்
தாய்மையை மிதிக்கிறார்கள்

பெண் தனம் இல்லாதவள்
பெருமையாய்
விலைப்படுகின்றாள்
பெண் குணம் படைத்தவள்
பெருமூச்சு விடுகின்றாள்

மாப்பிளைக்கு ஸ்கூட்டரும்
மாருதிக்கார் கைச்செயின்
சமையலறைப் பாத்திரங்கள்
சமத்தியான சீதனமாம்.

வழி மீது விழி வைத்து
வடிவான பெண்களை
வலைவீசிப் பிடிக்கிறார்கள்
வலியவே
கைப்பிடிக்கிறார்கள்

ஓரிரண்டு குழந்தைகள்
ஒவ்வொன்றாய்ப் பிறந்தபின்
சீதனம் கொண்டுவா என
சீரழிப்பார் குடும்பத்தை

பாரத தேசம் தனில்
பாவம் பெண்களை
எண்ணெய் ஊற்றி
எரிக்கின்றார்கள்
ஏன் சீதனக் கொடுமை

அடுக்கடுக்காய் சீதனத்தை
அள்ளிவைக்கும்
மாப்பிள்ளைமார்கள்
அடிமை போல் மாமன்
வீட்டில்
அடியாள் வேலை
செய்கின்றாள்.

சீதனத்தை வாங்கியவன்
செலவழித்தும் வீணாக்கியும்
மனைவிதனை
விலக்கிவிட்டு
சொகுசாக வாழ்கின்றான்.

## ஒகஸ்ட் மாத திருவழிபாட்டு நாட்காட்டி

| திகதி | வாசகம் | பதிலுரை | வாசகம் | நற்செய்தி | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | எரே. 26:11-16,24 | தி.பா.69:14-15,29-30,32-33 | | மத்.14:1-12 | 1 |
| 2 | ச.உ. 1:2,2:21-23 | தி.பா.90:3-6,12-17 | கொலோ.3:1-5,9-11 | லூக்.12:13-21 | 2 |
| 3 | எரே. 28:1-17 | தி.பா.119:29,43,79,80,95,102 | | மத்.14:13-21 | 3 |
| 4 | எரே. 30:1-2,12-15,18-22 | தி.பா.102:15-20,27,21-22 | | மத்.14:32-36 | 4 |
| 5 | எரே.31:1-7 | எ.ரே.31:10-13 | | மத். 15:21-28 | 5 |
| 6 | தானி.7:9-10,13-14 | தி.பா.97:1-2,5-6,9 | 2பேது.1:16-19 | லூக்.9:28-36 | 6 |
| 7 | நா.கூ.1:15,2:2,3:1-3,6-7 | இ.ச.32:33-36,39,41 | | மத்.16:24-28 | 7 |
| 8 | நா.கூ.1:12,2:4 | தி.பா.9:7-12 | | மத்.17:14-19 | 8 |
| 9 | சா.ஞா.18:6-9 | தி.பா.33:1,12,18-22 | எபி.11:1-2,8-9 | லூக்.12:32-48 | 9 |
| 10 | 1கொரி.9:6-10 | தி.பா.112:1-2,5-9 | | யோவா.12:24-26 | 10 |
| 11 | எசே. 2:8,3:4 | தி.பா.119:24,72,103,111,131 | | மத்.18:1-5,10-14 | 11 |
| 12 | எசே. 9: 1-7,10:18-22 | தி.பா.112:1-6 | | மத்.18:15-20 | 12 |
| 13 | எசே. 12:1-12 | தி.பா.78:56-62 | | மத்.18:21,19:1 | 13 |
| 14 | எசே. 16:1-15,60,63 | எசா.12:2-6 | | மத்.19:3-12 | 14 |
| 15 | தி.வெ. 11:19,12:1,3-6,10 | தி.பா.45:1-11 | 1கொரி.15:20-26 | லூக்.1:39-56 | 15 |
| 16 | எரே. 38:4-6,8-10 | தி.பா.40:1-3,17 | எபி12:1-4 | லூக்.12:49-53 | 16 |
| 17 | எசே. 24:15-24 | இ.ச.32:18-21 | | மத்.19:16-22 | 17 |
| 18 | எசே. 28:1-10 | இ.ச.32:26-28,30,35-36 | | மத்.19:23-30 | 18 |
| 19 | எசே. 34:1-11 | தி.பா.23:1-6 | | மத்.20:1-16 | 19 |
| 20 | எசே. 36:23-28 | தி.பா.51:10-13,16-17 | | மத்.22:1-14 | 20 |
| 21 | எரே.37:1-14 | தி.பா.107:2-9 | | மத்.22:34-40 | 21 |
| 22 | எசே. 43:1-7 | தி.பா.85:8-13 | | மத்.23:1-12 | 22 |
| 23 | எசே. 66:18-21 | தி.பா.117:1-2 | எபி.12:5-7,11-13 | லூக்.13:22-30 | 23 |
| 24 | தி.வெ. 21:9-14 | தி.பா145:10-13,17-18 | | யோவா.1:45-51 | 24 |
| 25 | 2தெச.2:1-3,14-17 | தி.பா.93:10-13 | | மத்.23:23-26 | 25 |
| 26 | 2 தெச.3:6 -10,16 -18 | தி.பா.128:1-2,4-5 | | மத்.23:27-32 | 26 |
| 27 | 1கொரி. 1:1-9 | தி.பா.144:2-7 | | மத்.24:42-51 | 27 |
| 28 | 1யோவா. 4:7-16 | தி.பா.37:3-6,30-41 | | மத்.23:8-12 | 28 |
| 29 | எரே. 1:17-19 | தி.பா.71:1-6,15-17 | | மாற்.6:17-29 | 29 |
| 30 | சீ.ஞா. 3:19-21,30-31 | தி.பா.68:3-6,9-10 | எபி.12:18-19,22-24 | லூக்.14:1,7-14 | 30 |
| 31 | 1கொரி.2:1-5 | தி.பா.119:97-102 | | லூக். 4:16-30 | 31 |

### நற்செய்தித் தூண்டுதல் போட்டி முடிவுகள் பற்றிய விபரம்

நற்செய்தித் தூண்டுதல் போட்டி விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாட்கள் பின்போடப்பட்டுள்ளன. போட்டி 3 இன் விடை களை 20-08-98 க்கு முன்னரும், போட்டி 4 இன் விடைகளை 30-08-98க்கு முன்னரும் அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)

சிறுவர்களுக்கான



## தொடர் குறுநாவல் 07
# ஒரு சிறிய புதுமை

*தமிழ் வடிவம் : எஸ்.எம்.யோசவ்*

அருகில் நின்று அவனது விண்ணப்பத்தைச் செவிமடுத்த மேற்றிராணியாருக்கு அவனது பேச்சு வேடிக்கையாகவே இருந்தது. சிரிப்பூட்டும் இக் கோரிக்கையை பரிபாலகர் ஏற்றுக்கொள்வாரா? நிராகரிப்பாரா? என்பதை ஆவலுடன் அவதானித்துக் கொண்டிருந்தார்.

"இப்படியான பிராணிகளை இப்புனிதத் தலத்துக்குள்ளே கொண்டு செல்ல நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை; இன்று உன்னை அனுமதித்தால் பின்னர் ஆலயம் மிருகங்களாலேயே நிறைந்து விடும்; அதனால் ஆலயப் புனிதம் அழிந்துவிடும். ஈற்றில் இது மிருகச் சாலையாக மாறிவிட்டாலும் அதிசயமில்லை" கண்டிப்பாகக் கூறிவிட்டார் பரிபாலகர்.

அடிகளே! எவருக்கும் தெரியாமல் மிக இரகசியமாக நான் கழுதையை ஆலயத்துக்குள் கொண்டு சென்று சத்தப்படாமலே வெளியேறி விடுவேன்" கெஞ்சுவது போலக் கேட்டான் சிறுவன்.

பரிபாலகருக்குச் சிறுவனில் அனுதாபம் ஏற்பட்டது. ஆனால் கழுதையை உள்ளே அனுமதித்துபின் அது இறந்து விட்டால் அந்தக் கதை பரவி மக்கள் மத்தியில் நம்பிக்கை தளர்ந்து விடக் கூடுமோ என்ற அச்சம் உறுத்தவே. அருகில் நின்ற ஆயர் என்ன சொல்லுவாரோ என்ற எண்ணத்தால்; "நாங்கள் அனுமதித்தாற்கூட; படிக்கட்டுகள் வழியாக இந்தக் கழுதையை எடுத்துக் கொண்டு அடித்தளத்தில் உள்ள கல்லறைக்குப் போவது உன்னாலே முடியாத காரியம்; எனவே இவ் எண்ணத்தை விட்டுவிடுவதே நல்லது." என்று சமாதானம் பண்ண முற்பட்டார் பரிபாலகர்.

"ஒரு நூற்றாண்டுக்கு முன்னே பாவிக்கப்பட்ட பழைய வாசல்வழியாக உள்ளே போகமுடியும் என அறிகிறேன். அதைத் திறந்து உதவி செய்தால் பெரிய உபகாரமாயிருக்கும்". சிறுவனின் இந்தக் கேள்வி பரிபாலகரை அதிர்ச்சியடையச் செய்தது. அவன் இப்படிக்கேட்பான் என அவர் எதிர்பார்க்கவில்லை.

"என்ன, கோவிலை இடிப்பதா? மூடப்பட்ட வாயிலைத் திறப்பதா?" சற்றுக் கோபத்துடன் வினவினார் பரிபாலகர். "நீ வீட்டுக்குப்போய்; உள்ளத்தைத் திறந்து புனிதரிடம் செபித்தால் நம்பிக்கை நிறைந்த உனது செபம் கேட்கப்படுந் தானே." மேற்றிராணியார் சிறுவனுக்கு ஆறுதல் கூறிப்பார்த்தார்.

"ஆண்டவரே, இத்திருத்தலத்தில் செபிப்பதுபோல் அது இருக்காது" தலை அசைத்தவாறு கண்கலங்கி விம்மலோடு பதிலளித்தான் பெப்பினோ. "புனித அசிசியார் பார்க்கக்கூடியதாய் நோயுற்ற எனது கழுதையை அவரது கல்லறைக்கு நான் அழைத்துவரவேண்டும்" தொடர்ந்தான் சிறுவன்.

"எனது கழுதை மற்றக் கழுதைகளைப் போன்றதல்ல. அது கிழக்கழுதையுமல்ல. அதன் வசீகரமும், புன்முறுவலும் எவ்வளவு இதமானது. இப்பொழுதெல்லாம் அதன் முகத்தில் முறுவலிப்பே இல்லை. அது நோயுற்ற நாளிலிருந்து அதன் தேசு குறைந்துவிட்டது. ஆனால் இழந்துபோன அதன் புன்னகையும், முகப் பொலிவும் புனிதரின் அருளால் மீண்டும் அதற்கு வரப்பெறும். அது குணமடைந்து பழைய நிலைக்கு மீளும் என்று நான் திடமாக நம்புகிறேன்" அழாக் குறையாகக் கூறி முடித்தான் சிறுவன்.

"மகனே, எனது முடிவை மாற்ற இயலாது. நான் சொன்னது சொன்னதுதான். கழுதையை அசிசியாரின் புனிதத்தலத்தினுள்ளே அனுமதிக்கவே முடியாது. தீர்க்கமாகக் கூறிவிட்டார் பரிபாலகர்.

பெப்பினோ கவலை தோய்ந்த முகத்துடன் டமிக்கோ அடிகளிடம் வந்து நடந்தவற்றை விபரமாகத் தெரிவித்தான். ஆயர்கூட ஆலயப் பரிபாலகரை மசியச் செய்ய முடியவில்லை என்று கூறிய சிறுவன் இனி யார்தான் அவரது மனதை மாற்ற முடியும்? யாருடைய உத்தரவுக்குப் பரிபாலகர் பணியப் போகிறார். ஏமாற்றம் நிறைந்த சிறுவனின் கேள்வி இது.

"உரோமாபுரியிலுள்ள பாப்பரசரைவிட வேறு எவரும் அசிசிப்பதியின் பரிபாலகரைப்பணியவைக்க முடியாது. பரிசுத்த பிதா மிகவும் நல்லவர். இரக்கமுள்ள தந்தை இங்கு நடந்த சம்பவங்களைக் கேட்டால் அவர் மனமிரங்குவார். மனம் இளகி ஆவன செய்வார். ஆனால் அவருக்கு வேலைப்பழுவோ மிகுதி. அவரைப் பேட்டிகாண்பது மிகவும் கடினமாயிருக்கும்" மிகவும் பரிவோடும் அனுதாபத்துடனுடம் அடிகளார் பேசினார்.

பெப்பினோ, கழுதையை, நடத்திக் கொண்டு தனதுதொழுவத்தை அடைந்தான். கழுதைக்குத் தீனி போட்டுத் தண்ணீரும் வைத்தான். அதைத் தடவிக்கொடுத்து வியர்வையையும் புழுதியையும் துடைத்தெடுத்தான்.

(வளரும்)







## இந்த இடத்தில் சிரிக்கவும் ~06

### சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்கவேண்டாம். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (லூக் 18:15-16) என்னும் லூக்காவின் நற்செய்திப் பகுதியைப் படித்து சமயபாட ஆசிரியர் விளக்கம் கொடுத்தார். பாடசாலை முடியும் மணி அடித்தது. சிறுவர்கள் கும்மாளம் அடித்துக்கொண்டு பாடசாலையை விட்டு வெளியே ஓட ஆயத்தமானார்கள். ஆசிரியர் கைதட்டி அவர்களை அழைத்து "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் என்று யேசு கூறிய பகுதியை வகுப்பில் உங்களுக்கு விளக்கினேன் அல்லவா? உங்களில் எத்தனை பேருக்கு மோட்சத்திற்கு போக விருப்பம்" என்று கேட்டார். எல்லோர் கரங்களும் மேல் எழுந்தன. ஒரு சிறுமி மட்டும் கையை உயர்த்தாமல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தாள். ஆசிரியர் சிறுமியைப் பார்த்து "உனக்கு மோட்சத்திற்குப் போக விருப்பம் இல்லையா?" என்று கேட்டார். சிறுமி கவலையோடு "பள்ளிக்கூடம் முடிய வேறு ஒரு இடமும் போகாமல் நேர வீட்டுக்கு வரும்படி அம்மா கண்டிப்பாக சொல்லி இருக்கிறார். ஆனபடியால்தான்" . . . என்று இழுத்தாள்.



# விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம் 05

*அருள்திரு. ம. இ. பயஸ்*

அதிகாரம் – 3

## பாவத்தின் விளைவுகள்

**1–5**

ஆதி ஆகமம் மூன்றாம் அதிகாரம், முதல் பெற்றோரின் வீழ்ச்சியில் மூன்று அம்சங்களைக் கூறுகின்றது. சோதனை, பாவம், தண்டனை. பாம்பின் வடிவத்தில் சோதிப்பவன் சாத்தான் (பசாசு) சோதிக்கப்படுவது விலக்கப்பட்ட மரத்திற்கு அருகாமையில் தனிமையில் நின்ற பெண் புதிய மேன்மையான நிலை, பதவி, அதிகாரம் அதிகரிக்குமென அவளுக்கு ஆசை நாட்டப்பட்டது.

**6–8**

பார்த்தாள், எடுத்தாள், உண்டாள், ஆணுக்கும் கொடுத்தாள் பழத்தை. அவனும் உண்டான். விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டதன் வினையை உணர்ந்தனர். ஒன்றுமில்லாமல் அனைத்தையும் இழந்தனர். வெட்கப்பட்டனர். தங்களை உடுத்திக்கொண்டனர். அச்சம் அவர்களை ஆட்கொண்டது. அவர்கள் ஓடி ஒழித்தனர்

**9–13**

எங்கே (எந்த நிலையில்) நிற்கின்றாய்? அஞ்சுவது தானா நீ பெற்றுக்கொண்ட உயர்வு? நிர்வாணியே! பழத்தை உண்டு அழிவைத் தேடிக் கொண்டாயோ? பெண்ணின் மடமை மட்டுமல்ல, அந்தப் பெண்ணைக் கொடுத்த இறைவனின் குற்றமாம் என்கிறார் ஆண் ஆதாம். பெண் ஏவாள் குற்றத்தைப் பாம்பில் போட்டு விடுகிறாள். சோதிப்பவனிலும் சோதனைக்கு தம்மைப் பலியாக்கியவர்களுக்கும் தீர்ப்பு–தண்டனை கொடுக்கப்பட்டது.

**14–15**

**பசாசின் உடன் உதவியாளனாகிய** பாம்பு **சபிக்கப்பட்டது. பாம்**பு மக்களால் அருவருக்கப்படுவதுபோல் பசாசும் பெண்ணின் **எதிரியாக்கப்படுகின்றது.** அருளுக்கும், **பாவத்திற்கும்** இடையே நித்திய போராட்டம் குறிப்பிடப்படுகிறது. பல சித்திரங்களிலும் உருவங்களிலும் யேசுவின் தாய் மரியாள் தனது கால்களால் பாம்பை மிதிப்பதை நாம் காண்கின்றோம். இந்த வேதாகம வார்த்தைகளே அதன் காரணமாகும். திருவெளிப்பாடு நூலும் பெண்ணும் பாம்பும் பற்றிக் கூறுகிறது. இது மரியாளுக்கும் திருச்சபைக்கும் சாரும். இறைவனிடம் இருந்து பிரிக்கமுடியாத உத்தம படைப்பு மரியாளே. அரு. 2:4,19:26 இல் குறிப்பிடும் "அம்மா" அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டு; அவளே புதிய ஏவாளும் யேசுவின் சீடர் அனைவருக்கும் தாயுமாவாள். (அரு, 19:26) கிறிஸ்துவினால் எற்படவிருக்கும் மீட்பு அறிவிக்கப்படுகின்றது.

முதல் மூல நற்செய்தி இதுவேயாகும். பெண்ணின் வழியாக அவருடைய மனித அவதாரம் (எனவே லூக்காஸ் நற்செய்தி இயேசுவின் பரம்பரையைக் குறிக்கும் பொழுது ஆதாம்வரை செல்கிறார்.) குறிப்பிடப்படுகின்றது. (1திமோ. 11:15) கன்னிப் பெண்ணின் மகனாக இருப்பார். இயேசுவின் சோதனை, வேதனை, மரணம் குறிப்பிடப்படுகின்றது. அவருடைய குதிக்காலை தீண்ட செய்யும் முயற்சியாக இயேசு சோதிக்கப்பட்டார். மரண தண்டனை, பாடுகள், மரணம் அனுபவித்தார். எவ்வாறாயினும் இயேசு வெற்றிகொண்டு அதன் தலையை நசுக்குவார்.

**16**


பாவம் புரிந்த பெண்ணின், தண்டனை 16ஆம் வசனத்தில் கொடுக்கப்படுகின்றது. அவள் துயரம் மிகுந்தவளாக காண்பிக்கப்படுகின்றாள். ஆயினும் தாங்க முடியாத வேதனை இன்பமாக மாறும். (அரு. 26:21)

**17**

பாவியாகிய ஆதாமும் தண்டனை பெறுகின்றார். அவனது வதிவிடம் சபிக்கப்படுகின்றது. தொழில்கள் வழியாக தன் **உயிரைப் பாதுகாக்க வேண்டும். உணவு பெறவேண்டும். மண்ணுக்குச் செல்லு**ம் மனிதன் அதன் பயனைப்பெற பாடுபட வேண்டும். உழைப்பின் வழியேதான் வாழ்வு. அவனது வாழ்நாட்கள் எண்ணிக்கை இடப்பட்டது.(குறைக்கப்பட்டது) அவன் உடல் தூசிக்கும், மண்ணுக்கும் மீண்டும் செல்லவேண்டியதாயிற்று. பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற இறைவனின் ஆணை, ஆரம்ப ஆசீர் நிலைத்து நிற்கின்றது. முதல் பெண் ஏவாள் என்று அழைக்கப்பட்டாள். தவறிப் போனவர்களாயினும் அவர்களுக்கு உணவும், உடையும் அருளுகின்றார் இறைவன்.

(வளரும்)

# புனிதர் . . . . (03)



**பாதை புதியதாயினும் துணிந்து புறப்படுவர்**

நன்றி Mike, Saints...are (Hants, 1986)

# 2000 ஜூபிலி ஆண்டு

## எண்டா என்ன அண்ணே? 09

**அண்ணை நான் குழந்தை யேசு வழிபாட்டிற்கு சென்று வரும் பொழுது எனது நண்பனைச் சந்தித்தேன். பல விடயங்களைப் பற்றி உரையாடல் நடைபெற்றது. அவ்வேளை குழந்தை யேசு வழிபாடு இல்லையாம். அது பக்தி முயற்சி என்று சொல்லுகிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வழிபாடு என்றால் என்ன? பக்தி முயற்சி என்றால் என்ன? கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கோ?**

தம்பி உமது நண்பன் கூறியது பிழையில்லை. வழிபாடு வேறு. பக்திமுயற்சி வேறு. பலருக்கு ஏன் அதிகமானவர்களுக்கு திருவழிபாட்டிற்கும், பக்தி முயற்சிக்கும் வேறுபாடு தெரிவதில்லை. அவர்கள் எல்லாவற்றையும் திருவழிபாடு என்றே நினைக்கின்றார்கள். வழிபாடு என்பது மனித வாழ்வின் மைய நிகழ்ச்சியாகும். இறைவனோடு மனிதனுக்குள்ள உறவை ஆழப்படுத்தவும், மனிதனை அன்புறவில் பிணைக்கவும் வழியாக அமைவது திருவழிபாடு. கிறிஸ்தவ மக்களாகிய நாம் நம் ஆண்டவர் யேசு வழியாக தந்தையாகிய இறைவனுக்குச் செலுத்தும் வழிபாட்டை திருவழிபாடு என்று அழைக்கின்றோம். அதாவது திருச்சபையாகிய கிறிஸ்துவின் விசுவாசிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவோடு இணைந்து இறைத் தந்தைக்கு தங்கள் சொல்லாலும் செயலாலும் செய்யும் வழிபாடு திருவழிபாடு. எனவே திருவழிபாடு ஒரு கோணத்தில் கிறிஸ்துவின் பணியாகவும் மறு கோணத்தில் திருச்சபையின் பணியாகவும் உள்ளது.


கிறிஸ்துவின் குருத்துவப்பணியை திருச்சபை மிகச் சிறந்த முறையில் **திருவழிபாட்டில் நிறைவேற்றுகின்றது. மேலும் கூறினால் கிறிஸ்துவின் (பாஸ்கா, பாடுகள் மரணம், உயிர்ப்பு) மறைபொருளை திருச்சபை அடையாளங்கள் (ஆள், பொருள், வார்த்தை, செயல், உடல்நிலை) வழியாகக் கொண்டாடுகிறது. திருவழிபாட்டில் இறைத்தந்தையை மகிமைப்படுத்துகின்றோம். நாம் புனிதம் அடைகின்றோம். சமூக உறவு வளர்க்கப்படுகிறது. மறைக்கல்வி போதிக்கப்படுகிறது.**

திருவழிபாடு என்பது திருப்பலி, திருவருட்சாதனங்கள், திருப்புகழ் மாலை என்பன. எல்லா வழிபாடுகளிலும் சிறப்பானதும், முதன்மையானதும், உச்சமானதும் திருப்பலியே. எனவே இம்மூன்றும் தவிர்ந்த மற்ற எல்லா செயல்களும் பக்தி முயற்சியே. ஒரு கிறிஸ்தவன் தனித்தோ, பிறருடன் சேர்ந்தோ செய்யும் செப, தப, செயல்களை பக்தி முயற்சிகள் என்கிறோம்.(செபமாலை, சிலுவைப்பாதை, நவநாட்கள், நற்கருணைச் சந்திப்பு, தியானம், குழந்தையேசு, இறையிரக்கப்பக்தி, புனிதர் வணக்கம்) போன்றவை.

திருவழிபாடும் பக்தி, முயற்சியும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. பக்தி முயற்சிகள் எல்லாம் எம்மை உண்மையான திருவழிபாட்டிற்கு இட்டுச் செல்ல வேண்டும். ஒருவன் இறை இரக்கப் பக்தி முயற்சியை ஒழுங்காக அனுசரித்துக்கொண்டு ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாவிடில் என்ன பயன்? திருவழிபாடு கிறிஸ்துவும் அவர் உடலாகிய திருச்சபையும் ஏற்படுத்திய சடங்குகளைக்கொண்டது. பக்தி முயற்சிகளுக்கு திருச்சபையின் அங்கீகாரம் இருந்தாலும் அவை தனிமனிதரால் உண்டாக்கப்பட்டவை. திருவழிபாட்டிற்கு ஆயரினால் அபிஷேகம் செய்யப்பட்ட அதிகாரம் பெற்றுள்ள ஒருவர் தலைமை தாங்க வேண்டும். ஆனால் பக்தி முயற்சிக்கு திருமுழுக்கு பெற்ற ஒரு விசுவாசி தலைமை தாங்கலாம். எனவே தம்பி திருவழிபாடு, பக்தி முயற்சிகளுக்கிடையில் வேறுபாடு விளங்கியிருக்கும் என நம்புகிறேன்.

இ.ம. ஜெயசீலன்

## அர்ச்சனைப் பூக்கள் 2



திருப்பலி நடந்துகொண்டிருந்தது. பூசை தொடங்கியது முதல் முடியும் வரை ஒரு அம்மா செபமாலையைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"என்ன பூசை நேரமும் செபமாலை சொல்லுகிறீர்களே?" என்று கேட்ட போது "அதற்கென்ன பூசையை சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் போது செபமாலையைச் சொன்னால் நிறையப் பயன் கிடைக்குமே" என்றார்.

திருப்பலிப் பூசையின் மகத்துவம் என்ன? – செபமாலையின் பலன் என்ன? என்பதை அறியாதபடியால் தான் இந்தக் குழப்பம்.

திருவழிபாடு என்றால் என்ன? என்ற கேள்வியைக் கேட்டால் சற்றுக் குழம்பிப் போகும் நாம் பூசை . . . என்று தொடங்கி விட்டால் தங்கு தடையின்றி அந்தோனியார்நோவினை வரை வந்து முடிப்போம்.

சரி, திருவழிபாடு என்றால் என்ன?

திருச்சபையின் ஆற்றலுக்கு ஊற்றாகவும், திருச்சபையின் செயற்பாடுகளுக்கு உச்சமாகவும் வழிபாடு உள்ளது என இரண்டாம் வத்திக்கான் சங்க திருவழிபாடு பற்றிய கொள்கைத்திரட்டு எண் 10 விளக்கம் தருகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் தந்த முதல் ஏடு இதுவாகும். "அர்ச்சனைப் பூக்கள்" என்னும் திருவழிபாடு பற்றிய இத்தொடர் கட்டுரையில் திருவழிபாடு பற்றிய வத்திக்கான்சங்க கொள்கைத்திரட்டு பல தடவைகள் ஆதாரம் காட்டப் பயன்படுத்தப்படும்.(தி.பா.) என்று இனி இங்கு குறிப்பிடப்படுவது இரண்டாம் வத்திக்கான் சங்க திருவழிபாடு பற்றிய கொள்கைத்திரட்டையே குறிக்கும்.

திருச்சபையின் ஊற்றும் உச்சமும் (source and summit) திருவழிபாடு என்று சொல்லும் இந்த ஏடு "தகுதியிலும், நிலையிலும் திருவழிபாட்டின் ஆற்றலுக்குத் திருச்சபையின் வேறு எந்த செயலும் இணையாகாது" (தி.பா.எண்07) என்று சொல்லுகிறது.

இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே உறவை உருவாக்கி அதை ஆழப்படுத்தி வளர்ப்பதே வழிபாடாகும். நம்மில் உள்ள இறைவனை வழிபட வேண்டும் என்ற உணர்வைத் தூண்டி இறைவரங்களை நம்மேல் அள்ளிப் பொழிய வழி வகுப்பதே வழிபாடாகும்.

யேசுவின் வாழ்வின் முக்கிய மறை நிகழ்வுகளான பாடுகள் – மரணம் – உயிர்ப்பு ஆகியவற்றை அடையாள முறையில் நினைவு கூர்ந்து அருட்சாதன முறையில் கொண்டாடுவதே வழிபாடாகும்.

"இயேசுக் கிறிஸ்துவின் குருத்துவப் பணியை செயற்படுத்துவதே திருவழிபாடு எனலாம்". (தி.பா:7). கிறிஸ்தவ மக்களது வாழ்வின் ஊற்றாகவும் உச்சியாகவும் திருவழிபாடு விளங்குகின்றது என்பது இப்போ நமக்கு தெளிவாகின்றது. 'மேலும் வழிபாட்டில் இரு நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்பது நமக்குப் புரிகிறது. அதாவது

1. திருவழிபாட்டில் நாம் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக தந்தை இறைவனைப் புகழ்கின்றோம்.

உ. நாம் நிகழ்த்தும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் வழியாக இறையருளைப் பெற்று நாம் புனிதமாகின்றோம். தேவைகளில் நிறைவு செய்யப்படுகின்றோம். மீட்பை முழுமையாகப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

இவ்வாறு பார்க்கும் போது திருவழிபாடு மறையுடலின் தலையாகிய கிறிஸ்துவாலும், உடலாகிய திருச்சபையாலும் இணைந்து நிகழ்த்தப்படும் ஒரு கூட்டு நிகழ்வாகும். இந்த நிகழ்வு. முடிவில்லாத ஒரு நிகழ்வு, உலக முடிவுவரை நிகழப்போகும் ஒரு நிகழ்வு இறை மாட்சியும் மனித மீட்பும் முடிவில்லாமல் நிகழச்செய்த ஒரு ஏற்பாடே திருவழிபாடாகும்.

*(வளரும்)*

# கேளுங்கள் சொல்லுகிறோம் . . . (02)

தொகுப்பு
செல்வி. வயலற் இம்மனுவேல்

4. உ000ம் ஆண்டில் உலகம் அழிந்துவிடும் என்று சிலர் சொல்கின்றனர். இதற்கு ஆதாரம் ஏதும் உண்டா?

உலகம் ஒரு காலத்தில் அழியும். இது கிறிஸ்து நாதர் கூறிய உண்மை மட்டுமல்ல. விஞ்ஞானிகளே ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

உலகம் எப்போது அழியப் போகிறது என்பதுபற்றி பலர் தாம் நினைத்தபடி வியாக்கியானங்கள் கூறுகின்றனர். இதுவரை பல சந்தர்ப்பங்களில் உலக அழிவை எதிர்பார்த்து நிலத்துள் பாதுகாப்பு தேடியவர்களும் உண்டு. தற்கொலை செய்தவர்களும் உண்டு. ஆனால் அந்தக் கால நேரம் எப்போது வரும் என்பது பற்றி எந்த இறைவாக்கினரும் முன்கூறி வைக்கவில்லை. கிறிஸ்துநாதரும் சில அடையாளங்களை மட்டுமே அறிவித்துள்ளார். ''அந்நாளோ நாழிகையோ ஒருவனுக்கும் தெரியாது. தந்தைக்கு தெரியுமே அன்றி வானதூதருக்கும் மகனுக்குங் கூடத் தெரியாது".

௫. விவிலியத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் முரண்பாடு உண்டா ?

இவை இரண்டும் இருவித வேறுபட்ட உண்மைகளைக் கூறுகின்றன.

விஞ்ஞானம் இயற் பொருட்களையும் அவற்றின் தன்மைகளையும் பயன்பாட்டையும் பற்றிய உண்மைகளைக் கூறுவது.

விவிலியம் , இறைவன், மனிதன் இவர்களுக்கிடையிலான உறவையும், மனிதன் பற்றிய இறைவனின் திட்டங்களையும் மனிதன் செய்யவேண்டியவையையும் பற்றிக்கூறும். இவை விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட விடயங்கள்.

விவிலியம் இந்த உண்மைகளை வெளிப்படுத்தும் போது, அந்நூல்கள் எழுதப்பட்ட காலத்திற்கு ஏற்ற முறையில், அக்கால மக்களுக்குப்புரியும் படியாக அவர்களது மொழி நடையில், மரபில் கூறுகின்றது. இதை சரிவர விளங்கிக்கொள்ளாதவர்களுக்கு அதில் விஞ்ஞானத்திற்கு முரணான விடயங்கள் இருப்பதுபோல் தோன்றலாம்.

6. கடவுள் விக்கிரக வழிபாட்டைத் தடுத்திருக்கிறாரே அப்படியானால் சுருபங்களைவைத்து வணங்குவது தவறல்லவா?

யாத்திராகமத்தில் தரப்பட்டுள்ள முதலாம் கற்பனையில் ''சிலைகளையோ, ஓவியங்களையோ உருவாக்க வேண்டும். அவைகளை வழிபடவோ, அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது.

மறைநூலைப் படிக்கும்போது வார்த்தைகளை மட்டுமல்ல, அவற்றின் உட்பொருளையும் கூர்ந்து கவனிக்கவேண்டும். அவை கூறப்பட்ட சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் அவதானிக்க வேண்டும். ''வழிபடுதல்" ''பணிவிடை புரிதல்". என்ற வார்த்தைகள் உயிருள்ள ஒருவருக்கு செய்யப்படுவதாகவே தோன்றுகின்றன. பண்டைய நாகரீகங்களைப் பார்க்கும்போது அங்கு மக்களால் அமைக்கப்பட்ட தெய்வச் சிலைகள் தெய்வங்களாகவே மதிக்கப்பட்டு அவற்றுக்குப் பலிகளும் செலுத்தப்பட்டன.யூதமக்களும் இத்தகைய வழகக்கத்தை மேற்கொள்வதைத் தடைசெய்வதற்காவே இக்கற்பனை கொடுக்கப்பட்டது. ஆனால் சிலைகளைத் தெய்வங்களாக மதிப்பதற்கும் அவற்றை அடையாளங்களாக கொள்வதற்குமுள்ள வேறுபாட்டை நாம் வேதாகமத்திலேயே காண்கின்றோம். உடன்படிக்கைப் பேழைமீது ஓர் அரியணையும் இரு கெருபீன்களின் உருவத்தையும் அமைக்குமாறு இறைவன் தாமே கட்டளையிட்டார், இவற்றின் முன் மூப்பர்கள் குப்பற வீழ்ந்து வணங்கினார்கள். ஏனெனில் அது இறை பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



## விடுதலைப் பயணத்தில் இஸ்ராயேலரும் - ஈழத்தமிழரும் -02

அருட்சகோ. பா.பி. இராஜசிங்கம்

இஸ்ராயேல் மக்கள் அந்நிய நாடான எகிப்தில் அடிமைகளாக இருந்து விடுதலைபெற்று வளம் கொழிக்கும் சொந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழ் மக்கள் தமது சொந்தமண்ணில் இருந்தாலும், தமது விடுதலையை நோக்கி பயணமாகின்றார்கள்.

இராணுவ அராஜகங்களுக்கு தப்ப தமது சொந்த மண்ணை விட்டுப் புறப்படுகின்றார்கள்.

இஸ்ராயேல் மக்கள் தமது சொந்த நாட்டிலிருந்து அந்நிய மன்னர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்கள். தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அரசுரிமை பறிக்கப்பட்ட நிலையில் அடிமைகளாக்கப்படுகின்றார்கள். இந்நிலையில் நாம் இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதில் பெரும் முரண்பாடு காணப்படுகின்றது. ஆனால் இரு பகுதியினரின் ''அனுபவங்கள்'' உணர்வு - ரீதியாகச் சிந் திக்கும்போது பல ஒற்றுமைகள் காணக் கூடியதாக உள்ளது.

### விடுதலைப் பயணத்தின் அரசியல் பின்னணி.

இஸ்ராயேல் மக்களினதும், ஈழத்தமிழ் மக்களினதும் விடுதலைப் பயணம் ஒரு அரசியல் பின்னணியில் உள்ள நிகழ்வாகும். இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்திற்கு முன்னதாக எகிப்தில் சுதந்திரமாக வாழ்ந்தார்கள்.(தொ.நூல் 47:11-12)

ஆனால் அவர்களின் மக்கள் தொகை பெருகத் தொடங்க எகிப்தியர் அச்சம் கொண்டனர். எதிர்காலத்தில் இஸ்ராயேல் மக்கள் ஒன்றுகூடித் தம்மைத் தாக்கக்கூடும் என்ற பயம் எகிப்தியரை ஆட்கொண்டது. எனவே எகிப்திய மன்னன் இஸ்ராயேல் மக்களை கடின வேலைகளால் துன்புறுத்தினான். மேலும் ''பாலை நிலத்தில் எனக்கொரு விழா எடுக்குமாறு என் மக்களைப் போக விடு என இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைத்துள்ளார்''. (வி .ப. 5:1), என மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் எடுத்துக்கூறியபோது அவன் மேலும் கோபமடைந்து இஸ்ராயேல் மக்களின் வேலைகளை அதிகப்படுத்தி அவர்களைக் கொடுமைப்படுத்தினான். (வி.ப.5) அது மட்டுமன்றி மோசேயினுடையவும் ஆரோனுடையவும் குரல் இஸ்ராயேல் மக்கள் சார்பாக ஓங்க ஓங்க பார்வோனின் மனமும் கடினமானது.(வி.ப.8:32,9:7-12) இதனால் பார்வோன் இஸ்ராயேல் மக்களை இன்னும் அதிகமாக அடிமைப்படுத்தினான். ஆயினும் இறைவன் இஸ்ராயேல் மக்களை மோசே மூலம் விடுவித்தார்.

இலங்கையில் காலணித்துவ ஆட்சிக்கு முன் தமிழ் -சிங்கள இனங்களுக்கிடையே தன்னாட்சி அரசுகள் இருந்தன என்பது வரலாறு கூறும் உண்மை. காலணித்துவ அரசின் கீழ் இருந்தபோதும் தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். ஆனால் 1948 ஆம் வருடம் பெற்ற சுதந்திரத்துடன் ''இன ஒடுக்கம்'' சிறிது சிறிதாக தளிர்விட ஆரம்பமாகியது. ஏனெனில் தமிழ் மக்களின் சமய சமூக பொருளாதார வளர்ச்சி சிங்களவர்கட்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதனால் தமிழர்களின் சுதந்திர உணர்வு மேலோங்கியது. அதன் விளைவாக அகிம்சை ரீதியாக பலவித போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(தொடரும்)

# மீண்டும் சந்திப்போம்

என் நண்பி கிறிஸ்டியின் வீடு நோக்கிச் செல்கின்றேன். வழமையாக அங்கு மகிழ்ச்சியுடன் செல்லும் எனக்கு இன்று அவ்வாறு செல்ல முடியவில்லை. வீட்டை அண்மிக்க அண்மிக்க என் கால்கள் நடக்க மறுக்கின்றன. துயரம் என் நெஞ்சை அடைக்கின்றது. வரவேற்பறையில் என் நண்பி கிடத்தப்பட்டிருக்கின்றாள். அவளின் உயிரற்ற உடலைப் பார்க்கும் போது, சிரித்த முகத்துடன், முகமெல்லாம் மலர்ச்சி பொங்க அவள் என்னை இதே இடத்தில் வரவேற்பது என் நினைவுத் திரையில் வந்து செல்கின்றது.

"என்ன, இப்போதுதான் இங்கு வர கண் தெரிந்ததா?" "யார் உனக்கு பாதை சொல்லித் தந்தார்கள்?" என்னைக் காணும் போதெல்லாம் வழமையாக அவள் கேட்கின்ற கேள்விகளை இன்று அவளால் கேட்க முடியவில்லை "தேநீர் வேண்டுமா?" கவிதை நயத்துடனான அவளின் அடுத்த கேள்விகளும் "உன் 'ஹோட்டலில்' எல்லாம் இருக்கும் என எனக்குத் தெரியும். தாகமாக இருக்கிறது. ஏதாவது தா" என்ற எனது பதிலும் அதனைத் தொடர்ந்து எம் இருவரினது சிரிப்பொலியும் இப்போதும் என் மனதில் எதிரொலிக்கின்றது.

கிறிஸ்டி . . . . உனது இன்ப துன்பங்களை என்னுடன் நீ மனம் விட்டு பகிர்ந்து கொள்வதை நினைத்துப் பார்க்கின்றேன். கடந்த ஒரு வருடமாக நோய் உன்னை அதிகமாகவே தாக்கியது. உனது உடல்,உள வேதனைகள், நீ அனுபவித்த துயரங்கள் ஆகியன உனது பொறுமையையும், சகிக்கும் தன்மையையும் மேலும் அதிகரித்தன. வாழ்வில் நீ சந்தித்த சவால்கள், பிரச்சனைகளுக்கு நீ முகம்கொடுத்த விதம் இறைசித்தத்தை நீ வாழ்வில் நிறைவேற்றுவதையும். குடும்பத்தின் மட்டில் உனக்கு இருந்த எல்லை அற்ற அன்பையும் எடுத்தியம்பியது.

"இறைவன் அவரால் அன்பு செய்யப்படுபவர்களுக்குத் தான் அதிகமான துன்பங்களைத் தருவாராம். எனது நோயைக் குணப்படுத்துமாறு நான் அவரைக்கேட்கவில்லை. அதனைத் தாங்கிக்கொள்ள சக்தியைத் தருமாறு தான் கேட்கிறேன். வேதனை மத்தியிலும் நீ கூறும் இவ் வார்த்தைகள் என்னை அதிகமாக . . . ஆழமாக . . தொட்டது. யாவருக்குமே ஊட்டமும் புத்துணர்ச்சியும் தருகின்ற வார்த்தைகள் அல்லவா இவை?

ஆசீர்வதிக்கப்பட்ட பண்டங்கள், புனிதர்களின் நினைவுச் சின்னங்கள், பரிசுத்த பூமியில் இருந்து (Holy Land) கொண்டுவரப்பட்ட நீர், எண்ணெய், மண் எதுவாக இருந்தாலும் உனக்குக் கொடுக்கும்போது மிகுந்த விசுவாசத்தோடும், பயபக்தியோடும் அவற்றைக் கண்களில் ஒற்றி, முத்தமிட்டு மகிழ்வுடன் நீ பெற்றுக் கொள்வது நிச்சயமாக சூழ இருப்போருக்கும் அவர்களின் விசுவாசத்தை அதிகரிக்க வழி சமைக்கும்.

பல வருடங்கள் முன்நோக்கிச் செல்கிறேன். நமது நட்பு மலர்ந்து . . . விரிந்து . . . வளர்ந்து . . . பரந்து நின்றது. இருவரும் வெவ்வேறு விதமான வாழ்வைத் தெரிந்து கொண்டோம். இல்லற வாழ்வைப் புரிந்துகொள்ள உனது அனுபவங்களும், துறவற வாழ்வைப் புரிந்துகொள்ள எனது அனுபவங்களும் எமக்குதவின.

இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உன்னைச் சந்தித்தேன். அன்று உன்னால் கதைக்க முடியவில்லை. என் முகத்தை ஏறிட்டு நோக்கிய உன் விழிகள் பல விடயங்களை எனக்குக் கூறின. "இனிமேல் இவ்வுலகில் சந்திக்க மாட்டோம்." என்று சொல்லாமல் சொல்வதற்காகத் தானா உனது விழிகளின் ஓரத்தில் கண்ணீர் ஊற்றெடுத்தது? அதற்கும் முன்னதாக இறுதியாக உன்னைச் சந்தித்த நிகழ்வை எண்ணிப் பார்க்கின்றேன். அன்று வழமைபோல உனது புன்னகை . . . பகிடி கலந்த பேச்சுக்கள் . . . பகல் உணவருந்த உன் வீட்டிற்கு ஓர்நாள் வருமாறு எனக்கு அழைப்பு விடுத்தாய். ஆனால் அதுதான் நாம் கடைசியாக கதைக்கும் சந்தர்ப்பம் என நான் எள்ளளவும் எண்ணவில்லை. உன் அன்புக் கட்டளையை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு என்னை மன்னித்துவிடு.

இவ்வுலகில் உனது பணியினை முடித்துவிட்டு இன்று படைத்தவருடன் கலந்திடச் சென்றுவிட்டாய். நானும் ஓர்நாள் அங்கே நிச்சயம் வருவேன். அதுதானே எமது நம்பிக்கை. அதுதானே எமது எதிர்பார்ப்பு. எனவே அங்கே சந்திப்போம் மீண்டும் சந்திப்போம்.

இறுதியாக உன்னை மீண்டும் ஒருமுறை பார்த்து

"ஜோதிதோன்றும் ஓர்தேசம் உண்டு.
விசுவாசக்கண்ணால்பார்க்கின்றோம்.
நம் பிதா அழைக்கும்பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்.
இன்பநாள் ஈற்றிலே மோட்சக் கரையில்
நாம் சந்திப்போம்."

என்ற பாடல் வரிகளை மனதுக்குள் முணுமுணுத்து உனக்கு பிரியாவிடை அளித்து அவ்விடத்தைவிட்டு நகருகின்றேன்.

மீண்டும் சந்திக்கும் வரை உனக்கு இறை ஆசீர்.

-கொழும்பு ரஞ்சி-

## கோப்பாய் புனித மரியாள் ஆலயத் திருநாள்

கோப்பாய், புனித மரியாள் ஆலய திருநாள் நவநாட்களை பங்குத்தந்தை அருள்திரு டானியல் (O.M.I) அடிகள் கொடியேற்றி நவநாட்களை ஆரம்பித்து வைத்தார். "குழந்தைகளின் வாழ்வு", கள்ளம், கபடமற்ற வாழ்வு, "இறை பணியாளர்களின் வாழ்வு", இறைவனுக்கேற்புடைய வாழ்வாக இருக்க வேண்டும். "கிறிஸ்தவவாழ்வு" இறைவனைத்தேடும் வாழ்வு அது ஒரு தேடல் வாழ்வு. "விசுவாச வாழ்வு" விண்ணரசின் செல்வங்களை போர்த்திய வாழ்வு. இறையரசின் சாட்சி வாழ்வு. கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்ட வாழ்வு, இளமை வாழ்வு, இளைய சமுதாயத்தின் வாழ்வு. அது ஒரு குறிக்கோளைக்கொண்ட இலட்சியவாழ்வு. இளைஞன் தன்னைக்கொண்டு செல்லும்வாழ்வு இவர்கள் சமுதாயத்தின் தூண்களாக திகழ வேண்டியவர்கள். குடும்ப வாழ்வு அன்றைய தினம் த்னித்தனிக் குடும்பங்களாகத் திருப்பலியில் பங்குபெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி இறைமகன் இயேசுவின் குடும்பத்தில் நிலவிய திருக் குடும்பவாழ்வாக வாழ வேண்டியவர்கள் வழிகாட்டவேண்டியவர்கள் பெற்றோர்களே என்பதனை மறையுரை வழியாக எடுத்துக் கூறினார் அருள்திரு P.J. யோகராஜா. 8 வது நவநாட் திருப்பலி அருள்திரு ஜீவாபோல் அடிகளாரினால் ஒப்புரவில் தூயஆவி என்னும் கருப்பொருளில் இடம் பெற்றது. உள்ளத்தை ஊடுருவும் மறையுரையாலும் பக்தியை உணரச்செய்யும் பஜனைப் பாடல்கள் வழியாகவும் நவநாளை சிறப்பித்துள்ளார். 29.06.98 காலை முதன்நன்மை பெறும் சிறுவர்களின் தினத்தை அருள்திரு அல்றின் அடிகளார் வருகைதந்து சிறப்பித்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார். திருவிழா அன்று அருள்திரு யேசுநேசன் அடிகளார் பெருவிழாவில் கலந்து சிறப்பித்தார். மறையுரை வழியாக அன்னையின் வாழ்க்கை, அவள் கடைப்பிடித்து வாழ்ந்த பண்புகள், தன்னை எவ்வாறாக தாழ்த்தி தாழ்மை உள்ளத்துடன் வாழ்ந்தாள் என்பதையும் அன்னையின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வாழ வேண்டியவர்கள் இறைமக்களாகிய நாம் அனைவரும் என்பதனை மறையுரை வழியாக எடுத்துரைத்தார். அடிகளாருடன், பங்குத்தந்தையும் அருள்திரு P.J. யோகராஜா, அருள்திரு அல்றின் அனைவரும் இணைந்து பெருவிழா திருப்பலியை சிறப்பித்தார்கள்.

செல்வி. சுதாகந்தினி
மறையாசிரியர்


## பாதுகாவலனில் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு

மரண அறிவித்தல்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், வெள்ளி விழா நிகழ்வுகள் ஆகியவற்றை எமது பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புவோர் கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களை மட்டுமே எமக்குத்தர வேண்டும். கலர்ப்படங்களோ, புளக்குகளோ ஒவ்செட்டில் அடிப்பதனால் இனிப்பயன்படுத்த முடியாது.

(ஆ-ர்)

## 20ம் வருட நினைவஞ்சலி



பெனடிற் அந்தோனிப்பிள்ளை
(கரம்பொன்)

தோற்றம் 17-10-1916 மறைவு 09-08-1978

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் இறைவா. இவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.

அன்பு மகன்
கிளரென்ஸ்
ராஜேந்திரன்குடும்பம்
A/87/98

### மகிழ்ச்சி உள்ளங்களை . . .
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் எமது பயணப் பொதிகள் ஒவ்வொன்றும் சோதனையிடப்பட்ட பின்னர் தான் அனுமதிக்கப்பட்டோம்.

மாதா கிராமம் சென்றடைந்ததும், எமது வாகனங்கள் அப்பால் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படாமையினால், மடுப்பதியிலிருந்து வந்த யூஎன். எச்.சீ ஆர்.(UNHCR) லொறிகளில் மடுப்பதி சென்றடைந்தோம். மடுப்பதி சென்றடையும் முன்னர் உள்ள தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் முகாமில் அன்போடு வரவேற்கப்பட்டோம். அவர்கள் குளிர்பானமும், பிஸ்கட்டும் தந்து உள்ளே செல்ல அனுமதிச் சீட்டும் வழங்கினார்கள். இதே போன்று எமது மீள் பயணத்தின் போது மாதா கிராமத்தில் இராணுவத்தினர் தேநீர் வழங்கினார்கள்.

மடுப்பதிப் பரிபாலகர் அருள்திரு தேவசகாயம் அடிகளும், அவரது உதவிச் சகோதரக் குருக்களும் எமது தங்குமிட உணவு வசதிகளை, சுகாதார மற்று ஏனைய வசதிகளை மிக திறமையுடன் புரிந்து, உள்ளன்போடு வரவேற்று உபசரித்தார்கள்.

எமது இரு பங்குகளிலுமிருந்து புறப்பட்ட யாத்திரிகர்களில் 90% சிங்கள மக்களாவர்.

முன்னைய வருடங்களில், ஆடிப்பெருநாள் ஆயத்த நவநாட்களில் மடுப்பதியில் காணப்படும் முகம்மலர்ந்த மகிழ்ச்சி ததும்பும் யாத்திரீகர்கள் போன்றோ, அழகான விடுதிகள் அமைந்த மடுப்பதியையோ நாம் அன்று காணவில்லை. மாறாக ஏக்கத்துடனும், கவலையுடனும், வறுமைக் கோலத்துடன் வாழ்வுக்காகப் போராடும் மனித உள்ளங்களையும், இல்லங்களையும் கண்டோம். மகிழ்ச்சி உள்ளங்களை அல்ல, மன வேதனை உள்ளங்களைக் கண்டோம். வேதனையின் சாயலும், சோதனையின் வாட்டமும், கொண்ட பிஞ்சு உள்ளங்கள் நிறையக் கண்டோம்.

பல வருடங்களின் பின்னர் மடுப்பதி வந்த சிங்கள மக்கள், முதல் முறையாகத் துயரம் நிறைந்த, கவலைகள் கொண்ட , சந்தோசம், சமாதானம் குறைந்த தமிழ் மக்களைக் கண்ணாரக் கண்டார்கள். கணவனை இழந்த கைம்பெண்களை, தாய், தகப்பன்மாரை இழந்த அநாதைச் சிறுவர்களை, மனைவிமாரைப் பறிகொடுத்த கணவன்மாரை, காலிழந்தோரை, கையிழந்தோரை, உடமைகளை இழந்து உருக்குலைந்தோரை, உள்ளம் பாதிக்கப்பட்டோரை இப்படியாகப் பல தரப்பட்ட மக்களைக் கண்டார்கள். அவர்கள் அன்று தான் உண்மைகளை உணர்ந்தார்கள். இருவர், மூவராக அங்குள்ள அவல மக்களைச் சந்தித்தார்கள். பெருங் கூட்டம் கூட்டமாகக் கூடி நம்மவர்களுக்கு கண்ணீர் காவியத்தை எடுத்துரைத்தார்கள்.

யாத்திரையாக வந்த மக்கள் உள்ளம் துடித்தார்கள். வியப்புற்றார்கள்.இத்தகைய வாழ்க்கை நிலையைக் கண்டும். கேட்டும் கண்ணீர் உகுத்தார்கள், அங்கு வாழ் மக்களுக்கு நாம் போதிய உதவிகளைச் செய்ய முடியாத நிலையில், நம் கைகள் விலங்கிடப்பட்டன. இருந்தும் துடிக்கும் உள்ளங்களுக்கு உடுத்து வந்த உடு துணிகளையும், கொண்டு வந்த பொருட்களையும் கலங்கிய கண்களோடு கொடுத்தார்கள். கொண்டு வர இருந்ததோ, கொடுத்துதவ நினைத்ததோ அநேகம். ஆனால் தடையை மீறி எதுவுமே செய்ய முடியாத நிலையில் மக்கள் வரவேண்டி அமைந்து விட்டது.

மடு அன்னையைக் காணவும், அன்னையின் ஆதரவில்வாழும் அவலம் நிறைந்த மக்களைக் கண்டுதவவும் பலர் காத்திருக்கிறார்கள். ஆனால் எமக்குப் போதிய அனுமதி வழங்கப்பட வேண்டும். கொழும்பு வாழ் ஏனைய பங்கு மக்கள் எப்போது தங்களுக்கும் இத்தகைய அன்னையின் அழைப்புக் கிட்டும் என்று காத்திருக்கிறார்கள்.

அன்னையின் ஆசியும் அழைப்பும் கிடைத்தால் பல பங்கு மக்கள் வரக்காத்திருக்கிறார்கள். இறை சித்தம் இதற்கு விடையளிக்கட்டும்.

### குருத்துவ – பல்கலை . . . . .
(8ம் பக்கத் தொடர்ச்சி)

ணர்வும், தியாக உணர்வும் எம்மில் தழைத்தோங்க வேண்டும். தொடர்ந்து இனம் காணப்பட்ட தீர்வுகளை செயல்படுத்த முனைகையில் எதிர்நோக்கும் தடைகள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தற்போதைய சூழலில் புத்தி ஜீவிகள் தனித்து நின்று செயற்பட முடியாது. காரணம் அரசியல் நிலமை எந்த சேவையிலும் சந்தேகப் பார்வையும் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலைப்பாடும் ஆகும். இன்னும், இல்லாமை இயலாமையால் கஸ்டப்படுவோருக்கு உதவியளிக்கையில் சமூகத்தால் வழங்கப்படும் தவறான தீர்ப்புக்கள் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இரு தரப்பினர் மத்தியில் இருந்து எழுந்த இக்கருத்து பரிமாறல்களின் தொகுப்புரையை Fr. ஜெராட் அடிகள் வழங்கினார்.

இதன் பின் இந்நாள் மகிழ்வுடன் அமைய சிநேகபூர்வ உதைப்பந்தாட்டப்போட்டி குருத்துவக்கல்லூரி மைதானத்தில் குருத்துவ மாணவருக்கும், பல்கலை மாணவருக்கும்இடையில் நிகழ்ந்தது. முடிவில் தேநீர் விருந்துபசாரமும் அவ்வேளையில் ஒரு சில கலை நிகழ்வும் எல்லோர் மனங்களையும் மகிழ்வித்து நிற்க பல்கலை மாணவி (செயலாளர்)யினதும், குருத்துவ மாணவ தலைவரினதும் நன்றியுரைகளுடன் இந்நிகழ்வு நிறைவுபெற்றது.

### அன்னை திரேசா . . . .
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நொந்து பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணி புரிவதே முக்கிய பணியாகக் கொண்ட அவர்கள் நொந்து வருந்தும் யாழ் மண்ணில் தமது பணியைத் தர மிக விரைவில் வரவுள்ளனர்.

இவர்கள் வருகை பற்றி யாழ் மறை வட்டக் குருமுதல்வர் அருள்திரு J.P.E செல்வராஜா அவர்கள் காவலனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் எல்லோரும் கைவிடப்பட்டு ஆதரவற்று இருப்பவர்களை ஆதரித்து மரண நேரத்திலும் அன்போடு உதவும் தனித்துவம் இவர்கள் பணி என்றும், இவர்களது பணியை யாழ் மண் எதிர் பார்த்து இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

### அருள்திரு யேசுதாசன் . . .
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ பாடங்களைப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் அருள்திரு. யேசுதாசன் பீலிப் (அ.ம.தி.) அவர்கள் தற்போது கண்டியில் இருந்தாலும் யாழ் மாணவர்களில் அக்கறை கொண்டு துரித கதியில் புதிய பாடத்திட்டத்திற்குரிய அனைத்து நூல்களையும் தமது சிரமம் பாராது தயாரித்து உடனடியாக அனுப்பி வைத்து யாழ் உயர்தர மாணவர்களின் கல்விக்கு ஒரு உந்து சக்தியாக திகழ்ந்துள்ளார். எனவே அருள்திரு. யேசுதாசன் பீலிப் (அ.ம.தி.) அவர்களை யாழ் உயர்தர மாணவர்கள் சார்பில் வாழ்த்தி நன்றிகூறி நிற்கின்றோம்.

இதேவேளை விரைவாக இந்நூல்கள் எம் கைகளில் வந்தடையவும் தேவையான போதெல்லாம் புதிய பாடத்திட்டத்தை இலகுவாக்க, விளங்கிக்கொள்ள கருத்தரங்குகளை நடாத்தி உதவிபுரிந்த முன்னை நாள் மறைக்கல்வி இயக்குனர் R.H. சகாயநாயகம் அடிகளாருக்கும் கருத்தரங்குகளில் கருத்துரை வழங்கிய குருமட குருக்களுக்கும், தொடர்ந்தும் இந்நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் R.C.X. நேசராஜா அடிகளாருக்கும் புத்தக வெளியீட்டிற்கு தங்கள் உடல் உழைப்பை வழங்கிக் கொண்டிருக்கும் மறைக்கல்வி நிலைய பணியாளருக்கும் எம் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்து நிற்கிறோம்.

இவர்கள் அனைவரின் சேவைகளையும் பாராட்டி இறையாசீர் இவர்களோடு இருந்து வழிநடத்த இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

உயர்தர மாணவர்கள் சார்பில்
யூபேட் யேசுதாசன்

## ஓராண்டு நினைவு அஞ்சலி



திருமதி மாகிறெற் எலியாஸ்

தோற்றம் 10.11.1921 மறைவு 01.08.1997

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."
(அரு 11: 26)

உயிர்ப்பும் உயிருமாகிய இறைவா! எம்மை விட்டுப் பிரிந்த உமது அடியாள் மாக்றெற் என்பவரின் ஆத்துமத்தை இரட்சித்து பரகதியில் உமக்கு துதி புரிந்து நித்திய பேரின்ப பாக்கியத்தை அடையக்கிருபை புரிந்தருளும்.

இவரின் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

981/14 1ம் ஒழுங்கை
வளன்புரம்
கொழும்புத்துறை
A/86/98

### கேளுங்கள் சொல் . . . . .
(5ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாம் சுரூபங்களை வணங்கும்போது அவற்றைத் தெய்வங்களாகக் கருதுவதில்லை. கிறிஸ்துநாதரையோ புனிதர்களையோ நினைவூட்டும் அடையாளங்களாகவே அவற்றைக் கருதுகிறோம். அவர்களுக்கு நாம் வெலுத்தும் வணக்கத்தையும் அன்பையும் காட்டவே அவற்றுக்கு வணக்கம் செலுத்துகின்றோம்.

முதலாம் கற்பனையை சொல்லுக்கு சொல் பின்பற்றுவதாக இருந்தால் சிற்பக்கலையும் ஓவியக் கலையும், ஏன் புகைப்படங்களுங்கூட தடை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

### உங்கள் கவனத்திற்கு

உங்கள் பங்கின் முக்கிய விழாக்களில் எடுக்கப் படும் தெளிவான கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களை குறிப்புக்களுடனும், பங்குத்தந்தையின் சிபார்சுடனும் எமக்கு அனுப்பிவையுங்கள். தத்ரூபமாகப் பிடிக்கப்பட்ட தரமான படங்களும், விடயங்களும் நிச்சயம் பிரசுரம் ஆகும்.

(ஆ–ர்)

### இயேசு என்ற . . . . . . .
(8ம் பக்கத் தொடர்ச்சி)

மறையுரை ஆற்றிய இயககுனர் "இயேசு என்கின்ற இளைஞனைப் பின்பற்றி அவருடைய பாதையில் நமது இளைஞர்கள், யுவதிகள் நடக்கவேண்டும். பணிசெய்யவேண்டும்" என்று எடுத்துரைத்தார். அன்றைய தினம் கிறிஸ்துவின் விண்ணேற்பு விழா என்பது குறிப்பிடத் தக்கது.

விழாவின் தொடராக மாலையில் கலைவிழா நடைபெற்றது. மறைக்கோட்ட முதல்வரின் தலைமையில் விழா நடைபெற்றது. கோட்ட முதல்வர் தமது உரையில் "யாழ். மறைவட்டத்தில் 25வது ஆண்டை நிறைவுசெய்து யூபிலிவிழாவைக் கொண்டாடும் முதலாவது இளைஞர் ஒன்றியம் இதுதான்" எனக் குறிப்பிட்டார். பிரதம விருந்தினர் "இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் அவர்களது கைகளிலேதான் உள்ளது" என்பதை எடுத்துக்காட்டி சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து மறையாசிரியர் இ.ம.ஜெயசீலன், அருள்சகோதரி தயாநாயகி செபமாலை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் ஒன்றியத்திற்கு அன்று தொட்டு இன்று வரை தனது பங்களிப்பை ஆற்றிவருகின்ற மறையாசிரியர் இ.ம.ஜெயசீலன் அவர்கள் விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தடகள விளையாட்டுப்போட்டிகள் மற்றும் விழாவைச் சிறப்பிக்க நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி, அதிஸ்டலாபச் சீட்டுழுப்பு ஆகியவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பருத்தித்துறைப் பங்கு யுவதிகள் மன்றத்தினரின் பட்டிமன்றம், இளைஞர் ஒன்றியத்தின் "செபமே ஜெயம்" நாடகம், கலட்டி சென். அன்ரனிஸ் கலாமன்றத்தின் நல்ல முடிவு நாடகம் ஆகியவை போன்ற பல்வேறு நிகழ்வுகள் மேடையேறின. தொடர்ந்து பணிவாழ்வில் வீறுடைபோட வேண்டுமென்று பருத்தித்துறை கத்தோலிக்க இளைஞர்களை வாழ்த்துகின்றார்கள் பங்குமக்கள். இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும் விழாவைச் சிறப்பிக்கவும் முன்னின்று உழைத்தவர் பருத்தித்தறை உதவிப் பங்குத்தந்தை அருள்திரு யூட் நிக்ஸன் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

பாதுகாவலன்

சுதேச குருக்கள் தினம்
ஜூலை 26,1998

சுதேச குருக்களுக்கு
'பாதுகாவலன்' அன்பு
நெஞ்சங்களின் வாழ்த்துக்களும்,
செபமும் உரித்தாகுக !

# குருத்துவ-பல்கலைக்கழக மாணவர்கள் சந்திப்பு

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களிற்கும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களிற்குமான ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் நடைபெற்றது. இறைவணக்கத்துடன் ஆரம்பமாகி fr. ஜெயசீலன் குரூஸ் அடிகளாரின் வரவேற்புரையைத் தொடர்ந்து அருள்தந்தையின் நெறிப்படுத்தலின் கீழ் ''சமுதாயத்தில் புத்தி ஜீவிகளின் பங்களிப்பு" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இன்றைய சமுதாயத்தில் இனம் காணப்பட்ட பிரச்சனைகள் என்று நோக்கியபோது கல்வி சீரழிவு, படிப்புப் பட்டதாரி ஆகியும் வேலையில்லாத நிலை, சமூகத்தின் உயர் அந்தஸ்து சுய தேவைக்காக பணி புரிதல், போர்ச்சூழல், வெளிநாட்டு மோகத்தால் கலாச்சாரச் சீரழிவு, சமூகத்தை வழிநடத்த ஆளுமை கொண்ட தலைவர்கள் இல்லாமையால் கட்டுக்கோப்பு குலைந்து பண்பாட்டுச் சீரழிவு, உயர் பதவிகளில் இருப்போரின் அதிகாரத்தனம், அரசியல் பொருளாதாரத் தடை காரணமாக களவு, பாலியல் வல்லுறவு, மனநிலை பாதிப்புற்ற நிலை, பெண்கள் சம அந்தஸ்தில் வாழ்க்கைத்துணை நாடி வியாபாரப் பொருளாகி வருகின்றமை, புத்திஜீவிகளே பிரச்சனையாக அமைகின்ற செயற்பாடுகள் போன்றவை எடுத்துக் கூறப்பட்டன. இத்தகைய பிரச்சனைகளை புத்திஜீவிகள் எவ்வாறு எதிர்கொண்டு செயற்பட வேண்டும் என்ற வினாவிற்கு இனம் காணப்பட்ட தீர்வுகளாக முதலில் நாங்கள் புத்திஜீவிகள் தானா? அவ்வாறாயின் சவால்களை எதிர்கொள்ள பூரண அறிவு இருக்கிறதா என்பதனை உணர வேண்டும்.

சமூகப் பிரச்சனைகளை அடையாளம் காண எங்கள் கண்களையும், உள்ளத்தையும் அகலத்திறந்து பார்க்க வேண்டும். முன்னேற்றகரமான செயற்பாட்டில் ஈடுபட எம் இறுக்கமான கட்டுக்களில் இருந்து விடுபட வேண்டும். நமது வாழ்க்கை ஒரு விடுதலைப் போராட்டத்திற்குள் அகப்பட்ட ஒன்று. நடைமுறையில் தடைகள் பல உண்டு எனினும் நடைமுறை விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எமது நாட்டில் குறிப்பாகத் தமிழ் மண்ணில் எத்தனையோ சமூகப் பிரிவுகள் ஏற்றத்தாழ்வுகள், இருப்பினும் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதும் தமிழரின் அழியாத சொத்தும் கல்வி. ஆகவே ஒவ்வொரு சமூகமும் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குள் நின்று கல்வி வளர்ச்சிக்காக தூரநோக்குடன், நிறைந்த அர்ப்பணிப்புடன் உழைத்தல், சமூகத்தோடு கொள்ளும் உறவில் சுமூகமான தன்மை நிலவ வேண்டும். துன்புறும் மக்களை, சமூகத்தில் பின்தங்கியிருப்போரை அணுகிச் சென்று புதிய வாழ்விற்கு உருக்கொடுத்தல் இவ்வாறான தீர்வுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் விழிப்பு

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## சின்னமடு யாத்திரைத்தல திருவிழா 05.08.98

வடபகுதியின் வரலாற்றுச் சிறப்புமிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான சின்னமடு யாத்திரைத்தலத் திருவிழா ஆவணி மாதம் 1ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நற்கருணைவிழா 4ஆம் திகதி மாலை 5மணிக்கும், திருநாள் திருப்பலி 5ஆம் திகதி காலை 9 மணிக்கும் இடம்பெறும்.

பிரயாணத்திற்கான சகல வாகன ஒழுங்குகளும், திருத்தலத்தில் தங்குவதற்குவதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கும் பங்குத் தந்தை J.J. மௌலிஸ் அடிகள் திருவிழாவில் பங்குபற்றி அன்னையின் ஆசீரைப் பெற்றுச் செல்லுமாறு அனைவருக்கும் அன்போடு அழைப்பு விடுக்கிறார்.

## பெரிய விளான் புனித யுவானியார் ஆலயத் திருவிழா

பெரியவிளான், புனித யுவானியார் ஆலயத் திருநாள் ஜூன் 28ஆம் திகதி ஞாயிறு காலை 7 மணித்திருப்பலி திருச்சுரூப பவனியுடன் சிறப்பாக நடை பெற்றது. 1992 ஆம் ஆண்டு இப்பகுதி மக்களின் இடம் பெயர்வுக்குப் பின்னர் இம்முறை இத்திருநாள் பங்கு மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

26 ஆம், 27ஆம் திகதிகளில் மாலை வழிபாடுகள் நடைபெற்றன. திருநாள் திருப்பலி ய[illegible] மறை மாவட்ட திருவழிபாட்டுக்குழு இயக்குனர் அருள் திரு ஜே.ஜே. மவுலிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

இளவாலை, சில்லாலை, அளவெட்டி பகுதி மக்களும் பெரிய விளானில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளவர்களும் பெருமளவு இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதே போல பெரியவிளான் புனித் அந்தோனியார் ஆலயத் திருநாளும் 13.06.98 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாலயங்களின் திருநாட்களை சிறப்பாகக் கொண்டாட சகல ஏற்பாடுகளையும் இளவாலை பங்குத்தந்தை அருள் திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் மேற்கொண்டார்.

## "கிளைகளின் திட்டமிட்ட, திருப்திகரமான சேவையில் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் உயர்ச்சி தங்கியிருக்கிறது."

– வரவேற்பு வீழாவில் புதிய பரிபாலகர் **R.C.X.** நேசராஜா அடிகள் உரை

கடந்த எட்டு ஆண்டு காலமாக யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் பரிபாலகராகப் பணி புரிந்த அருள்திரு R.H. சகாயநாயகம் அடிகளாரைத்தொடர்ந்து, பதிய பரிபாலகராகப் பெறுப்பேற்ற அருள்திரு R.C.X. நேசராஜா அடிகளாருக்கு கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் அளித்த வாவேற்பு வைபவம் கடந்த 02–05–98 அன்று யாழ் மறைக் கல்வி நடு நிலையத்தில் சங்கத் தலைவர் திருமதி பி.எம். சின்னத்துரை அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. சங்கத்தின் கிளைகளைச் சேர்ந்த ஆட்சி மன்ற பிரதிநிதிகள் யாவரும் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை திரு. S.L.சவுந்தரநாயகம் அவர்கள் நிகழ்த்தினார். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் கத்தோலிக்க பீடத் தலைவர் திரு. துரை ஆரோக்கிய தாசன், திரு. S.F. சவுந்தரம் திரு.P.W. நவராஜா, திரு. அ. பதுவைநாயகம் ஆகியோர் உரையாற்றினர். புதிலுரை வழங்கிய பரிபாலகர் அவர்கள் ''கிளைகள் தமது பணிகளைச் சரியான முறையில் செய்தால் தாய்ச் சங்கத்தின் செயற்பாட்டிற்கு அது உறுதுணையாக இருக்கும். கிளைகள் ஆண்டிற்குரிய செயற்திட்டங்களை முற்கூட்டியே வகுத்து, தாய்ச் சங்கத்தின் அனுசரணையோடு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பொதுச்செயலாளர். திரு சிறில் சுகந்தரன் அவர்கள் நன்றி நவின்றார்.

## மானிப்பாய் பங்கில் உறுதிபூசுதல் பாசறை

சென்ற மாதம் 26.06.98 தொடக்கம் 28.06.98 வரை மானிப்பாய் பங்கில் யாழ் மறைக்கல்வி நடு நிலைய பணிகள் சிறப்பாக நடை பெற்றன. மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலே பின்வரும் நிகழ்வுகள் நடந்தேறின.

முதலாம் நாள் நிகழ்வு மறை ஆசிரியர் கருத்தரங்கு 3.00 மணியளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. பங்குத் தந்தை அருள்திரு. இயூஜின் அடிகளார் இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அடையாள அறிமுகம், இறைவார்த்தை அறிவித்தல், துணைக்கருவிகளும், வாழ்க்கைச் செயற்பாடுகளும் பற்றி முறையே மறை ஆசிரியர் எஸ். எவ். சவுந்தரம், மறை ஆசிரியர் எஸ்.அந்தோனிப்பிள்ளை, மறை ஆசிரியர் இ.ம. ஜெயசீலன் அவர்களால் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

இரண்டாம் நாள் மானிப்பாய் பங்கச் சார்ந்த 260 மாணவர்களுக்கு உறுதிபூசுதல் பெறுவதற்கு ஆயத்தமாக பாசறை ஒன்று நிகழ்த்தப்பட்டது. இறை வணக்கத்துடன், பாசறைக் கீதத்துடன் ஆரம்பமான பாச

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# இயேசு என்கின்ற இளைஞனைப்பின்பற்றி அவருடைய பாதையில் நமது இளைஞர்கள் யுவதிகள் நடக்கவேண்டும்.

* பருத்தித்துறையில் இளையோர் ஆணைக்குழு இயக்குனர்

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய, கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு யூபிலிவிழா அண்மையில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மே மாதம் 23, 24ஆந் திகதிகளில் நடைபெற்ற இவ்விழாவானது தடகள விளையாட்டுப்போட்டி, நன்றித்திருப்பலி, கலைவிழா என மூன்று பிரிவாக நடந்தேறியது. விழாவைச் சிறப்பிக்கும் முகமாக 23ஆந்திகதி பிற்பகல் கலட்டி றோ.க. ஆ பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தடகள விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வருமான வண. பிதா. பி.எம். இம்மானுவேல் தலைமையில் நடைபெற்றது. 24ஆந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நன்றித் திருப்பலி யாழ் மறைவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அருள்திரு எஸ்.ஜே. இராஜநாயகம் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. பாப்பரசரின் கொடியும், இளையோர் ஒன்றியத்தின் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து தீபங்களைக் கையில் ஏந்தியவர்களாக இளைஞர்கள் பிரதம விருந்தினரையும் பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தையையும் ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து திருப்பலி ஆரம்பமாகியது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## ஆசிரியர்களாகிய .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பாக மன ஒரு நிலைப்பாட்டை புரிந்துகொண்டேன். ஆசிரியர்களாகிய எமக்கும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் இடையில் [illegible] படுகின்ற பிரச்சனைக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்று தெளிவாக நான் புரிந்துகொண்டேன். பல ஆசிரியகர்களின் உறவினையும் வளர்த்துக்கொண்டேன். தெரியாத எத்தனையோ பல விடயங்கள் பற்றி மிகவும் ஆழமாக உணர்ந்து இப்போ செயற்படக்கூடியதாக உள்ளது. இப் பயிற்சிப் பாசறை நம்முடைய எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். முக்கியமாக ஆசிரியர்களாகிய நாம் விடும் தவறை உணர்ந்து திருந்தி வாழ உதவியாக இருந்தது. நடைபெற்ற இந்த நாட்களில் நான் ஆசையுடனும், ஆ[illegible]டனும், உற்சாகத்துடனும் எவ்வித இடர்பாடுமின்றி பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. நாம் பல சிரமத்தின் மத்தியில் இங்கு வந்தாலும் அவற்றி னால் நாம் பெற்ற தெளிவையும் புத்தூக்கத்தையும், அறிவையும் இட்டு மிகவும் சந்தோசம் அடைந்தோம். தொடர்ந்தும் இனிமேல் நடக்கும் இப்படியான வகுப்புக்களில் பங்குபற்றிப் பயனடைவேன்.



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1998ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197